பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 21 சனிக்கிழமை (06.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

## நவநீதம்பிள்ளை அம்மையாருடன் அமைச்சர் சமரசிங்க சந்திப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேணுவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், இடம்பெயர்ந் (12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் சுற்றிவளைப்பு இரு பெண்கள் உட்பட 9 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் இரு பெண்கள் உட்பட 9 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரை மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்து குறித்த பகுதியில் தற்காலிகமாக தங்கியிருந்த சிலரே (12ஆம் பக்கம் பார்க்க)

# காணாமல் போயிருந்த படையினரின் சடலங்கள் புலிகளால் கையளிப்பு

## இராணுவ இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

**அக்கராயன்குளம் பிரதேச களமுனையில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற உக்கிர சண்டையில் காணாமல் போயிருந்த படையினர் சிலரது சடலங்கள் விடுதலைப் புலிகளினால் கையளிக்கப்பட்ட சடலங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.** (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கு 2009ஆம் ஆண்டுக்குத் தேவையான ஒரு தொகுதி புத்தகங்கள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்குத் தேவையான ஒரு தொகுதி புத்தகங்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்குத் தேவையான 8 இலட்சத்து 42 ஆயிரத்து 326 புத்தகங்களில் 6 இலட்சத்து 14 ஆயிரத்து 974 புத்தகங்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மிகுதிப் புத்தகங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2009ஆம் கல்வி ஆண்டுக்குத் தேவையான பாட நூல்களை (12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வடக்கில் கிளைமோர் தாக்குதல்

(கிளிநொச்சி)

வவுனியா வடக்குப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அனந்தர்புளியங்குளத்திற்கும் நெடுங்கேணிக்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் சின்னச் சவுக்கடிப் பகுதியில் இருந்து பாரிய அழிவினை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனரக ஆர்பீஜீஷெல்,ரி-56ரக துப்பாக்கி மற்றும் துப்பாக்கி ரவைகள் உட்படப் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாவட்ட பொலிஸ் பிரதம (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி நிலம் இராணுவத்தினருக்கு வரலாற்றுத் தோல்வியை வழங்கும்

### 'விடுதலைப் புலிகள்' ஏடு தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இராணுவத்தினருக்கு வன்னிப் போரரங்கில் தகுந்த பாடம் புகட்டப்படும் என விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான விடுதலைப் புலிகள் ஏட்டின் பிரதான தலைப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் நிலம் விழுங்கியபடி முன்னேறும் படையின் நகர்வுகளால் ஊக்கம் பெற்றுள்ள மகிந்த அரசு போரை மேலும் தீவிரப் படுத்தியுள்ளது.

போரில் படைகள் வெற்றிநடை போடுகின்றன என்று மகிந்த அரசு பிரகடனங்கள் விடுத்து வருகின்றது. மேலெழுந்த வாரியாகப் போரை ஆய்வு செய்வோரும், புலிகள் அழிக்கப்பட வேண்டும் என விரும்புவோரும் அரசின் வெற்றிப் பிரகடனங்களை நம்புகின்றனர்.

கண்ணால் (12ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மேலும் 24 குடும்பங்கள் குடியமர்த்தப்படுவர்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலய எல்லைப் பகுதியில் உடனடியாக 24 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்படுவதுடன் மேலும் 233 குடும்பங்களை மீள் குடியமர்துவதற்காக அவர்களின் அடையாளம் காணப்பட்ட இடங்களிலுள்ள மிதிவெடிகளை இராணுவத்தினர் அகற்றுவார்கள் எனவும் உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட விசேட குழு அறிவித்துள்ளது.

உயர் நீதிமன்றதால் நியமிக்கப்பட்ட வலி. வடக்கு உயர், (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் மீது கடற்படை துப்பாக்கிச் சூடு

(சென்னை)


தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்த மாட்டார்கள் என்று இலங்கை அரசு உறுதியளித்துள்ள நிலையில் மீண்டும் இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இது பற்றிய விபரம் வருமாறு,

நாகை மீனவக் குடியிருப்பைச்சேர்ந்த மீனவர்கள் 6 பேர் (12ஆம் பக்கம் பார்க்க)

அனலைதீவு-புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம்

அனலைதீவு -புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம்இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அட்ட ஈஸ்வரங்களில் ஒன்றான நாகேஸ்வரத்தின் எச்சங்களாக கருதப்படும் சிவ ஆலயமாகிய நாகேஸ்வரன் ஆலய வரலாற்றில் முதன் முறையாக மகோற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இவ் ஆலயம் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்துடன் நீண்ட வரலாற்றுத் தொடர்புடையதென்பதும் குறிப்பிடத்தக்கது. ஆலய திருவிழாவை முன்னிட்டு விசேட படகுச் சேவை புளியந்தீவுக்கும் நயினாதீவுக்கும்இடையே இடம்பெறுகிறது.

(C-1505)


மானிப்பாய் ஹற்றன் நஷனல் வங்கியின் தன்னியக்கப் பணப் பரிமாற்ற இயந்திர சமர்ப்பண நிகழ்வில் மானிப்பாய் ஹற்றன் நஷனல் வங்கியின் பொறுப்பதிகாரி மோ.ஜெ.லோறன்ஸ் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், நீதிபதி வசந்தசேனன், சுன்னாகம் எச்.என்.பி. முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# விரும்பிய இடங்களை நோக்கி இடம்பெயர வன்னி மக்களுக்குச் சுதந்திரம் வேண்டும்

## ஈ.பி.டி.பி. அறிக்கை

(யாழ்ப்பாணம்)

விரும்பிய இடங்களை நோக்கி இடம்பெயர்வதற்கு வன்னி மக்களுக்கு சுதந்திரம் வேண்டும் என ஈ.பி.டி.பி வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு, சொந்த வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்தல் என்பது துயரம் நிறைந்த நிகழ்வுதான். ஆனாலும் தமது சொந்த பாதுகாப்பின் நிமித்தம் எமது மக்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்போது அதை தடுத்து நிறுத்துவது மக்களின் உயிர்வாழும் உரிமைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே கருத வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கிப் பாதுகாப்பு படையினர் நகர்ந்து வருகின்றனர். இந் நிலையில் வேட்டோசைகளுக்கும் வெடிகுண்டு சத்தங்களுக்கும் மத்தியில் எமது மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய துயரம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அடுத்த கணம் என்ன நடக்குமோ தெரியாது என்ற ஏக்கத்தில் மட்டுமே ஒவ்வொரு கணங்களும் கழிந்து கொண்டிருக்கின்றன. இந் நிலையில் தமது உயிர் வாழும் உரிமைக்காக பாதுகாப்பான ஒரு சூழலை தேடி இடம் பெயர வேண்டிய கட்டாயம் வன்னி மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

தாம் எங்கு வாழ வேண்டும் என்பதும் எந்த சூழலில் வாழ்வது தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் என்பதும் மக்களின் சுயமான தீர்மானமாகும். எந்தவொரு படை நகர்விலும் சரி,. படையினருக்கு எதிரான தாக்குதலிலும் சரி அப்பாவி பொது மக்கள் சிக்குண்டு தவிப்பதும் அதில் அவலங்களை சுமப்பதும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. உயிர் வாழும் சுதந்திரமும் அதற்காக விரும்பிய இடங்களை நோக்கி நடமாடும் சுதந்திரமும் எமது மக்களுக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளாகும். இந் நிலையில் அப்பாவி மக்களை பாதுகாப்பான இடம் நோக்கி வருமாறு அரசாங்கம் அறிவித்தல் விடுத்திருக்கின்றது.

ஆகவே மனிதநேய அமைபபுகளும் சர்வதேச சமூகமும் சர்வதேச மற்றும் உள்ளூர் பொது அமைப்புகளும் மதத் தலைவர்களும் எமது மக்கள் தங்களது பாதுகாப்பை தேடி விரும்பிய இடங்களுக்கு செல்வதற்கான கோரிக்கையினை வெளிப்படுத்த வேண்டும். அதற்கான அழுத்தங்களை புலித் தலைமை மீது பிரயோகிக்க வேண்டும். இது எமது வன்னி மக்களுக்காக ஈ.பி.டி.பி. விடுக்கும் மனிதாபிமான வேண்டுகோளாகும் என்றுள்ளது. (எ)

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

### சித்திரத் திருமஞ்சம்

## ஆலய தர்மகர்த்தா சபையின் வாழ்த்துச் செய்தி

'உலகம் உய்ய வந்துதித்தனன்
அங்கே ஒரு திருமுருகன்'

இவ்வாறு உலக மக்களின் உயர்வுக்குத் தோன்றிய முருகன் கொக்குவில் மஞ்சவனப்பதியிலே கோவில் கொண்டருளி அவ்வூர் மக்களின் இன்னலை அகற்றி இன்னருள் புரியும் அருட்பெருஞ் சோதியாய் விளங்கும் காட்சிதான் என்னே? மாறாப் பிணியில் அகப்பட்டு வருந்தும் அடியார்களின் வருத்தம் எல்லாம் நீறாய்ப் போக நின்னருள் புரியும் மஞ்சவனப்பதி முருகனுக்கு உருகி உருகி உழைக்கும் உண்மை அடியார் துன்பம் எல்லாம் உருகிப் போக கருணைக் கந்தன் அழகிய திருமஞ்சத்தில் வலம் வரும் காட்சியினைத் தம் வாழ் நாளில் கண்டு பெற முடியாதா ஏங்கித் தவித்த வேளை எம் பெருமானுக்கு ஒரு திருமஞ்சம் அமைத்துக் கொடுப்பதற்கு பல உள்ளங்கள் மனம் கொண்டிருந்தாலும் எம்பெருமான், திருவாளர் தம்பித்துரை புவிராஜ் அவர்களே மஞ்சத் திருப்பணியைச் செய்து உவந்தளிப்பதற்கு பொருத்தப்பாடானவர் என்று திருவுளம் கொண்டார் போலும்.

எனவேதான் திரு. தம்பித்துரை புவிராஜ் மூலமே குறித்த திரு மஞ்சம் எம்பெருமான் வலம் வருவதற்கு ஏதுவாக செய்து வழங்கப்பட்டுள்ளது. இம் மஞ்சத்தினை சிறப்புற அமைத்துத் தந்துள்ள ஸ்தபதி சிவரத்தினம் ஜெயப்பிரகாஷ் அவர்களின் கைவண்ணத்தில் அவர் தம் குழுவினரின் ஒத்தாசையுடன் செய்துள்ளமையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

திருவாளர் தம்பித்துரை புவிராஜ் அவர்களின் குறித்த சீரிய பணியை பாராட்டுவதோடு அவரின் குடும்பத்தினரின் பாரிய பங்களிப்பு ஆலயத்திற்கு பல வழிகளிலும் கிடைத்துள்ளமையையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். அத்துடன் புவிராஜின் தந்தையாகிய அமரர் தம்பித்துரை ஐயாவின் பணியையும் மறந்து விட முடியாது. இவ் ஆலய திருப்பணியைச் செய்து உவந்தளித்த தம்பித்துரை புவிராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கு அருட்கடாட்சம் கிடைக்க எம் பெருமான் அருள்பாலிக்க வேண்டுவதோடு அடுத்து வரும் மகா கும்பாபிஷேகத்துக்கு முன்னதாக, நிறைவுறாதிருக்கும் உட்பிரகார மணிமண்டபத் திருப்பணியைப் பூர்த்தி செய்ய புவிராஜ் போன்ற அன்புள்ளம் படைத்தவர்கள் மூலம் நிறைவு பெற இறைவன் அருள்பாலிப்பாராக.

சுபம்

கா.பாலசுப்பிரமணியம் — தலைவர்
இரா.இராசலிங்கம் — செயலாளர்.
(C-1499)


Hatton National Bank

அடகுப் பொருட்களை ஏல விற்பனைக்கான

அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 30.06.2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 13.09.2008 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியா விட்டால்...

❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

*அல்லது*

❖ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகு பொருட்களை மீள அடகு வைத்துக் காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்குண்டு.

–ஹற்றன் நஷனல் வங்கி (C-1501)



வல்வை சிவகுரு வித்தியாசாலை
வல்வெட்டித்துறை

புதிய கட்டடத் திறப்பு விழா - 2008

| | |
|---|---|
| காலம் | :-06.09.2008 சனிக்கிழமை காலை 10.00 மணி |
| தலைவர் | :-திரு. ஆ. சிவநாதன் (அதிபர்) |
| பிரதம விருந்தினர் | :-Dr.தயானி அராக்கி அவர்கள் |

மேற்படி விழாவுக்கு பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(C-1504)



Ceylinco Insurance Company Limited

ஆசியாவில் முதன்மை விருது பெற்றதும் இலங்கை காப்புறுதித் துறையில் அசைக்க முடியாத தலைவனாக திகழும் செலிங்கோ லைவ் PLC ன் சுன்னாகம் கிளைக்குப் பின்வரும் பதவிகளுக்கு ஆட்களை இணைத்துக் கொள்கின்றது.

01. விற்பனை ஆலோசகர்

க.பொ.த. சா/த பரீட்சையில் 3 விசேட சித்தியுடன் கணித பாடம் அடங்கலாக ஒரே தடவையில் 6 பாடத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

02. அணித் தலைவர்

பதவி I ல் குறித்த தகைமையுடன் IBSL சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

03. விற்பனை மேற்பார்வையாளர்

பதவி II ல் குறித்த தகைமையுடன் ஆயுள் காப்புறுதித்துறையில் குறைந்தது 3 வருட முன்னனுபவம்.

(25000/= WORTH SALARY PACKAGE)

| | |
|---|---|
| நேர்முகத் தேர்வு | :- 08/09/2008 திங்கட்கிழமை 10.00 - 2.00 மணி வரை. |
| இடம் | :- செலிங்கோ லைவ் PLC 145, K.K.S. வீதி, சுன்னாகம். |

T.P. :- 021 222 8074 (1654)


### நெல்லியடி ம.ம.வி. மாணவர்கள் சிறிலங்கா ஜீனியஸ் –2008 இல் தேசிய மட்டத்திற்குத் தெரிவு

கொழும்பு பல்கலைக்கழகமும் டயலொக் நிறுவனமும் இணைந்து நடத்திய ஸ்ரீலங்கா ஜீனியஸ்-2008 பாடசாலை மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப எழுத்துப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.அரவிந்தன், த.ஆரண்யா, த.ஹம்ஷாலினி, சி.பவித்ரா ஆகியோரடங்கிய மாணவ அணியினர் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தினையும் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தினையும் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள தொலைக்காட்சியூடான போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான வெற்றிக் கேடயமும் பாடசாலைக்கான கணனி இயந்திரமும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட செயலமர்வில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஓ)

# இன்று ஒரு தகவல்

## மாமியார் மகிமை

மாமியாருக்கும் – மருமகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

அது ஒருவித மனோதத்துவ பாதிப்பேயன்றி வேறொன்றுமில்லை. அதை மனோதத்துவ ரீதியாகவே தீர்த்து வைப்பதற்கு நமது முன்னோர்கள் சில பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி வைத்திருந்தார்கள்.

அதாவது முற்காலத்தில் எல்லாம், மாமியார்தான் மருமகளுக்கு தலைவாரிப் பின்னிவிட வேண்டும் என்ற வழக்கம் இருந்தது. ஒரு வீட்டிற்கு மருமகளாக காலடி எடுத்து வைக்கும் பெண் தனது தாய் தந்தையைவிட்டு பிரிந்து ஒரு புதிய இடத்திற்கு வந்திருக்கின்றாள். அவளின் மன இறுக்கம் குறைய வேண்டுமானால் மனம் இலேசாக ஆகவேண்டும்.

ஒரு குழந்தையின் தலையை வருடினால் அது அப்படியே சொக்கிப்போய் விடும். இதே மாதிரித்தான் மாமியார், தலை கோதி விடுவதும் – வருடி விடுவதும் – சடை பின்னி விடுவதும் மருமகளுக்கு இதமாக இருக்கும். இதனால் இருவருக்கும் முன்ன மன இடைவெளி குறைந்து ஒரு புரிந்துணர்வு ஏற்படும். இதற்காகத்தான் இப் பழக்கத்தைக் கைக்கொண்டிருந்தனர். இருந்தாலும் இந்தக் காலத்தில் அது சாத்தியமா என்பது சிந்திக்க வேண்டிய விடயம் தான்.

புதிதாக கல்யாணமான ஒரு பெண்ணிடம் இந்த ஆலோசனையைச் சொல்லிப்பார்த்தேன். "நீங்கள் சொல்வது சரிதான். என் தலையை மாமியாருக்கு கொடுக்கத் தயாராகத்தான் இருக்கிறேன். அவர் அதை கோதிவிட்டால் பரவாயில்லை... அதற்குப் பதிலாக சுவருடன் சேர்த்து மோதிவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டது அந்தப்பெண்.

இந்தப்பிரச்சினை இந்தக்காலத்தில் மட்டுமல்ல அந்தக் காலத்திலும் இருக்கிறது. சில காலத்துக்கு முன் ஒரு ஆள் இருந்தான். அவன் மனைவி ஒரு கோடு கிழித்தால் அதைத் தாண்டவே மாட்டான். அப்படிப்பட்ட பதிவிரதன். அவன் மனைவிக்கு ஒரு பிரச்சினை. அதாவது மாமியாரை எப்படி வெளியகற்றுவது என்பதுதான் அது. ஒரு ஐடியா பண்ணினாள். கணவனைக் கூப்பிட்டு, "இதோ பாருங்க... உங்களின் அம்மாவை அழைத்துக் கொண்டு போய் எங்கேயாவது நடுக்காட்டில் விட்டுட்டு வந்துவிடுங்கள் அதுதான் நல்லது" என்றாள்.

இவனும் ஒத்துக்கொண்டு எங்கேயோ ஒரு ஊருக்கு அழைத்து கொண்டு போவதற்கு ஆயத்தமானான் இவரும் கிளம்பினார். இருவருக்கும் இரண்டு கட்டி சோற்றுப் பார்சல் கட்டிக் கொடுத்தாள். கணவனுக்கு கொடுத்த சாப்பாட்டுக்குள் பாற்சோறும் மாமியாருக்கு கொடுத்த சாப்பாட்டிற்குள் களிமண்ணும் இருந்தது. இது தெரியாமல் அவர்களும் அதைவாங்கிக் கொண்டு போனார்கள்.

நடுக்காட்டுக்கு வந்து சேர்ந்தனர். மகன் தாயிடம் "நீ இங்கேயே சாப்பிட்டுக் கொண்டிரு நான் அந்தப்பக்கமாகப் போய் வருகிறேன். என்று சொல்லிவிட்டு தவறுதலாக அம்மாவின் பார்சலை எடுத்துக் கொண்டு போய்விட்டான் திரும்பி வரவேயில்லை.

அந்த அம்மாவும் மகனைக் காணவில்லையே என்று அழ ஆரம்பித்தார். அவன் அப்பொழுது அந்தப்பக்கமாக நீராடுவதற்கு வந்த ஒரு தெய்வகன்னிகை "ஏனம்மா அழுகிறாய்?" என்று கேட்டது. இந்த அம்மாவும் விஷயத்தைச் சொல்லவும் "சரி... கவலைப் படாதீர்கள்" என்று ஆறுதல் கூறியது. இருவரும் சேர்ந்து கட்டிச் சோற்றுப் பார்சலைப்பிரித்துச் சாப்பிட்டனர். தெய்வகன்னிகைக்கு சரியான சந்தோஷம்.

உடனே அந்த அம்மாவுக்கு ஒரு வரம் கொடுத்தது. அந்த வயதான அம்மா இளமங்கையாக மாறிவிட்டார். அவருக்கு நகை – துணிமணியெல்லாம் கொடுத்து வீட்டுக்குப் போக வழியையும் காட்டிவிட்டது. இவர் வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் நடந்த உண்மையெல்லாம் கூறினார். மகனுக்கு உள்ளுக்குள் சரியான சந்தோஷம். மருமகளுக்கோ பொறாமையாகிவிட்டது.

உடனே அடுத்தநாள் தனது அம்மாவையும் களிமண் மூட்டையை கொடுத்தனுப்பி குமரியாக மாற்றிவிடலாம் என்று நினைத்து அனுப்பிவிட்டாள். மருமகனும் மாமியாரை கூட்டிக் கொண்டுபோய் அந்த குளக்கரையில் விட்டுவிட்டு வந்து விட்டான். மறுபடியும் அந்த தெய்வ கன்னிகை வந்தது. இந்த அம்மாவும் "வா சாப்பிடலாம்" என்று அழைத்தார்.

இருவரும் உட்கார்ந்து பார்சலைப்பிரித்தால் அதில் களிமண் தான் இருந்தது. தெய்வகன்னிகைக்கு கோபம் வந்துவிட்டது. உடனே "நீ கழுதையாக போகக்கடவது" என்று சாபம் கொடுத்து விட்டது.

உடனே அந்த மாமியார் எழுந்து நின்றார். காலைப்பார்த்தால் அது குளம்பாக மாறியிருந்தது. அவர் வீட்டுக்கு வரவர உடம்பு கொஞ்சம் கொஞ்சமாக கழுதையாக மாறிவிட்டது. வீட்டு வாசலில் கழுதையின் சத்தத்தைக் கேட்ட அந்தப் பெண் ஓடிவந்து பார்த்தாள். கணவன் ஒருபக்கமும் கழுதை ஒருபக்கமும் நின்று கொண்டிருந்தார்கள்.

அவளும் "என்ன ஆயிற்று" என்று விசாரித்தாள். அதற்கு அவன் "வரவர மாமியார் கழுதை போலானார்" என்றான். அதுவே ஒரு பழமொழியாகிவிட்டது. இப்பொழுதும் இந்த பழமொழி வழக்கில் உண்டு. இந்தக்காலத்து மகன் ஒருவனிடம், "நீயாக இருந்தால் அந்த நிலைமையில் என்ன செய்வாய்?" என்று கேட்டேன்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "நானாக இருந்தால் களிமண் மூட்டையை என் மனைவியிடம் கொடுத்தனுப்பி இருப்பேன்!" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சமூகவிஞ்ஞான ஆசிரியர்தின எழுத்துப் போட்டி முடிவுகள்

முதல்மூன்று இடங்களைப்பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

### பார்த்தெழுதுதல்

*தரம்-3*

பா.காருண்யா–சென்ஜோன்ஸ் பொஸ்கோ.வித்தி, இ.சைலயா–யாழ்ப்பாணக்கல்லூரி, தே.யாழினி– கிளி/ ஆணையிறவு அ.த.க.பாடசாலை.

*தரம் 4*

ஸ.டினோஷி–ம/அடம்பன் ம.வித்தி., ரா.அனிஷா–வ/அலக மிஜா வித்தி, தே.விவேதி–கிளி/ ஆணையிறவு அ.த.க.பாடசாலை.

*தரம் 5*

த.லக்ஷிகா–யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, வி.மதனிகா–மீசாலை வீரசிங்கம் ம.வித்தி., ப.சதுர்ஜன்–கிளிநொச்சி ம.வித்தி.

*தரம்–6*

தி.நிலக்ஷிகா–யாழ்ப்பாணக் கல்லூரி, து.ஜானுஷா–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி., க.மெர்லின்–ம/பெரியபண்டிவிரிச் சான் ம.வித்தி.

*தரம்–7*

ந.வினோபா–வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, ஸ்ரீ.சிந்துஜா–யூனியன் கல்லூரி, யூ.தர்சிகா–மு/ ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி.

*தரம்– 8*

தே.தேவிகா–மு/கலைமகள் வித்தி, பி.சொருபிகா–வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, அ.பிருந்திகா–வ/றம்பைக்குளம் பெண்கள் ம. வித்தி.

*தரம் –9*

செ.கஸ்தூரி–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி., இ.ஜிலானி முல்லைத்தீவு.வல்லிபுனம் ஜே.எஸ். வித்தி., க.நிதர்சினி–வ/றம்பைக் குளம் பெண்கள் ம.வித்தி.

*தரம்–10*

ஞா.அமலினி–ம/சென்சேவியர்பெண்கள் கல்லூரி, கொ.ஜெனுக்ஷன்–வவுனியா தமிழ் மத்திய ம.வித்தி.. அ.மிட்ஷன்–மு/உடையார்கட்டு ம.வித்தி.

*தரம்–11*

சு.பிரியா–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி., ஆ.இமரதி–மு/ புதுக்குடியிருப்பு ம.வித்தி., சி.கிரிஸ்ரீனா–ம/அடம்பன் ம.வித்தி.

*தரம் –12*

பா.நிவேதிகா–வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, ஸ்ரீ.ஜினோஷா–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி., தி.கேமராஜ்–ம/அடம்பன் ம.வித்தி.

*தரம் –13*

ச.ஷர்மிளா–வேம்படி பெண்கள் உ.பாடசாலை, ம.கெலன் சோபிஜா–அசசுவேலி சென்தேரேசா பெண்கள் பாடசாலை, செ.ராஜநீதி–கிளி/ அக்கராயன் ம.வி.

### எழுத்துருவாக்கம்

*தரம் –6*

சூ.சுகன்யா–மு/விக்னேஸ்வரா வித்தி, பா.ஆரணி–யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, இ.நிலோஜன்–வவுனியா தமிழ் ம.ம.வித்தி.

*தரம் –7*

செ.வித்தகன்–வவுனியா தமிழ் ம.ம.வி., சி.சௌமியா–வவுனியா தமிழ் ம.ம.வித்தி., சி.தனன்ஷிகா–மு/புதுக்குடியிருப்பு கல்லூரி.

*தரம்–8*

ப.சாயகி–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி, ஞா.சஞ்சீவ ராஜ்–வவுனியா தமிழ் ம.ம.வித்தி. பி.குண்வரன்–யாழ்.இந்துக்கல்லூரி.

*தரம் –9*

தே.தனுஜா–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி., பு.அனந்தசயன்–வவுனியா தமிழ் ம.ம.வித்தி. இ.பார்த்தீபன்–யாழ்ப்பாணம் இந்து கல்லூரி.

*தரம் –10*

இ.வைஷ்ணவி–கி/சென்தேரேசா பெண்கள் கல்லூரி, சி.பவித்திரன்–வவுனியா தமிழ் ம.ம.வித்தி, சி.தர்ஷிகா–கிளி நொச்சி ம.வி.

*தரம்– 11*

இ.சோபனா–உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, எ.ஜெ. கூல்– ம/சென் சேவியர் ஆண்கள் ம.ம.வித்தி., சி.கௌதமன் –வவுனியா தமிழ் ம.ம.வித்தி.

*தரம் –12*

வா.நிஷாந்திகா–வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, த. மோகன்ரங்கன் –வவுனியா தமிழ் ம.ம. வித்தி., இ.பவிராத்–ம./சென் சேவியர் ஆண்கள் ம.ம.வி

*தரம் –13*

ஜெ.தபிதா–ம.சென்சேவியர் பெண்கள்கல்லூரி, சே.சரணியா–வேம்படிபெண்கள் உயர்தரப் பாடசாலை, மு.அறிவரசி–வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை.

### செவிமடுத்தெழுதுதல்

*தரம்– 6*

சூ.புவிதா–யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வி.அனெறொயலின்– பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பா.மச்சாயின்–உடுவில் பெண்கள் கல்லூரி.

*தரம் –7*

சே.ஜனுஷி–யா/திருக்குடும்பக் கன்னியர் மடம், பா. எலுக்ஷனா–யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசலை, மு. சுலக்ஷனா– கி/ வட்டக்கச்சி ம.வித்தி.

*தரம் –8*

ஜெ.கோகுல்ராஜ்–ம.சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி, ஜெ.எமில்றெஜிங்ரன்–ம.சென்சேவியர் ஆண்கள் ம.ம.வித்தி. சோ.திரியம்பகி–வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை

*தரம் –9*

பெ. நிருஜா– ம.சென்ஆன்ஸ் ம.ம.வித்தி , கு.மௌனிகா–வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி, த. றொஷான் பீரிஸ்–ம.சென்சேவியர் ஆண்கள் ம.ம.வித்தி.

*தரம் –10*

ஜெ. நிவேதிகா–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி, ர.வைஷ்ணவி–கிளி/சென்தேரேசா பெண்கள்கல்லூரி, பி.ஆன் சிபோறின் ம/சென்சேவியர் பெண்கள் கல்லூரி.

*தரம் –11*

இ.சோபனா–உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, ம.மாதுரி–றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி., சி.சேவநித்திலன்–சென்பற்றிக்ஸ் கல்லூரி.

*தரம் 12*

செ.துளசினி–வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி., வா.நிஷாந்திகா– வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, பா.சுகிர்தா–ம/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி.

*தரம் –13*

க.ஜீல்நிருபா–ம/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, ஜ.தபிதா–ம/சென் சேவியர் பெண்கள் கல்லூரி, மு.அறிவரசி–வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை. (ஓ)

# இராசி பலன்

06.09.2008
(ஆவணி 21.சனிக்கிழமை)
ஸப்தமி முழுவதும்
விசாகம் முற்பகல் 8.51 மணிவரை
இராகுகாலம்–9.04–10.34 மணிவரை
சுபநேரம்–3.04– 4.34 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், வாகனபயம். வீண்பகை, போசன சுகம். |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும், தேகநலன். |
| மிதுனம் | ஆரோக்கியம், சுவாரஸ்யம், பகைவர்நேசம், முயற்சி கைகூடும். |
| கடகம் | வியாபாரசிந்தை, சிறுவியாதி, முயற்சிதாமதம், பொருள்விரயம. |
| சிங்கம் | தாய்வழி உறவு, சுபசெலவு, புதியவிடயம், நல்லமுயற்சி. |
| கன்னி | கூட்டுமுயற்சி, போசனசுகம், நல்லவருமானம், இனிய சம்பவம். |
| துலாம் | கடினவார்த்தை, வேலை சுமை, பணவிரயம், மரியாதைக் குறைவு. |
| விருச்சிகம் | சிந்தனை மிகுதி, போசன சுகம், நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | காரிய அலைச்சல், சுபசெலவு, வீண் மனஸ்தாபம், பிரயாணம். |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, விருந்துபசாரம், உறவினர் வருகை. |
| கும்பம் | தொழில் மேன்மை, நல்ல செய்தி, காரிய அனுகூலம், பிறர் உதவி. |
| மீனம் | புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, பிரயாணம். |

வளவன்



கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கரவெட்டி கோட்ட பாடசாலை மாணவர்களில் வறுமை கோட்டில் வாழும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கண்ணாடி வழங்கும் வைபவம் அண்மையில் கரவெட்டி தச்சன்தோப்பு அறநெறிப்பாடசாலையில் நடைபெற்றது. இதில் வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் மாலை அணிவித்து வரவேற்கப் படுவதையும் மேடையில் யாழ்.பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# ஆட்பதிவு திணைக்களத்தின் செயற்பாடுகள் கணனி மயம்

ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதில் புதிய நடைமுறைகளை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தை பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க அமைச்சரவையில் முன்வைத்தார். ஆட்பதிவுத் திணைக்களத்தின் செயற்பாடுகளில் பல மாற்றங்கள் செய்யப்படவிருப்பதுடன், தேசிய அடையாள அட்டையைப் பெறுவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் கணனி மயப்படுத்தப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

தேசிய அடையாள அட்டையைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் தற்பொழுது கையால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், எதிர்வரும் காலங்களில் அதனை கணனி மயப்படுத்தும் திட்டங்கள் இந்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய ஆட்பதிவு தொடர்பான சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்து புதிய நடைமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பாகவும் அதில் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஓ–6)

## மஹோற்சவம்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் இன்று சனிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13ஆம்திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1மணிக்கு தேர்த்திருவிழாவும், 15ஆம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1மணிக்கு தீர்த்தோற்சவமும் , 16 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் பொங்கலும் நடைபெறவுள்ளது. ஏனைய நாட்களில் காலை10 மணிக்கும் , மாலை 4 மணிக்கும் திருவிழா ஆரம்பமாகும். (ஓ

✠✠✠

சாவகச்சேரி செருக்கல்பதி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.(ஓ-29)

✠✠✠

அனலைதீவு-தெற்கு புளியந்தீவு ஸ்ரீ நாக ராஜேஸ்வரி அம்பிகா சமேத ஸ்ரீ நாகேஸ்வர சுவாமி திருக்கோவில் மஹோற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

12ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 13ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 15ஆம்திகதி தீர்த்தோற்சவமும்,16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

விழாவில் இன்றையதினம் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் தெய்வீகப் பேருரை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ

## வருடாந்த மஹோற்சவமும் மஞ்சம் வெள்ளோட்டமும்

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து10 தினங்கள் இடம்பெறும். மேலும் புதிதாக அமைக்கப்பெற்ற மஞ்சத்தின் வெள்ளோட்டம் இன்று பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும். (ஓ-36)

## முன்பள்ளி திறப்புவிழா

(மருதங்கேணி)

காந்தியூர் முன்பள்ளி திறப்புவிழா இன்று சனிக்கிழமை 12 மணியளவில் ச.சிறீஸ்கந்த்ராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கௌரவ விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதியம் திட்ட முகாமையாளர் க.மகேந்திரன் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் எஸ். சந்திர மோகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-35)

## நிதி ஒதுக்கீடு

கோப்பாய் பிரதேச செயலக அலுவலகத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் கொள்வனவுக்காக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது 2008 ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (ஓ-134)

# வடமராட்சிப் பிரதேச இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பும்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரதேச அரச திணைக்களங்கள். கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் ஆகிய நிறுவனங்களின் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே செல்லமுத்தூஸ்புடவையகத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட,துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்றும் நாளையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள துடுப்பாட்ட இறுதிச் சுற்றுப்போட்டியில் கல்வித்திணைக்கள அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதும்.

நாளை நடைபெறவுள்ள உதைபந்தாட்ட போட்டியின் 3ஆவது இடத்திற்கான போட்டியில் உள்ளூராட்சி மன்ற அணியை எதிர்த்து கரவெட்டிப் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. இறுதியாட்டத்தில் கல்வித் திணைக்கள அணியை எதிர்த்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அணி மோதும்.

உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம். வேதாபரணம் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி வி. ஜெயராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், உதவிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஓ-52,19)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டமும் ஆளுநர் சபைக்கான தேர்தலும் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பதின்மூன்று பிரிவுக் கிளைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்வுள்ளனர். (ஓ-134)



## யாழ்.செய்திகள்

## கிராம எழுச்சி விழாவும் விளையாட்டுவிழாவும்

திருநெல்வேலி இலங்கை வங்கி அனுசரணையுடன் கோண்டாவில் கலை வாணி இலங்கை வங்கிக் கிராம அறிமுக எழுச்சி விழாவும், விளையாட்டு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் கலைவாணி சனசமூக நிலையப் போசகர் மு.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடபிராந்திய இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், கௌரவ விருத்தினர்களாக வடபிராந்திய இலங்கை வங்கி செயற்பாட்டு முகாமையாளர்ந.சிவரட்ணம், நல்லூர் பிரதேசசெயலர் பா.ெந்தில்நந்தனன்,நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.யெ.சாந்தசீலன், J/119 கோண்டாவில் வடகிழக்கு கிராம உத்தியோகத்தர் பா.வசந்தகுமார், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் அதிபர் சு.இராசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். விளையாட்டு நிகழ்வுகளாக காலை 5.30 மணிக்கு ஆண்கள் மரதனோட்டமும் மாலை விளையாட்டு நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஓ

## ஆட்டோ சாரதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி

இலங்கை சீசஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளை உலக முதலுதவி தினத்தை முன்னிட்டு ஆட்டோ சாரதிகளுக்கும் முதலுதவிப் பயிற்சியினை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க பிரிவுகளிலிருந்து தலா இரண்டு சாரதிகள் இப் பயிற்சிக்கு அழைக்கப்பட இருக்கின்றனர்.

இதுதொடர்பான சுற்றுநிருபம் சபை பிரிவுக் கிளைக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-134)

## திறப்பு விழா

(மருதங்கேணி)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறவழி செயலக கட்டிட திறப்பு விழா இன்று சனிக்கிழமை மு.ப. 11.30மணிக்கு அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் வி. ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறஉள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் க. கணேஷ் கௌரவ விருந்தினராக கனடிய உலக பல்கலைக்கழக சேவை, இலங்கை பிரதிநிதி ஜெயராஜசிங்கம், சாவகச்சேரி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், அரச சார்பற்ற இணைய தலைவர் சி.வீ.கே. சிவஞானம், பிரதி திட்ட முகாமையாளர் சு. க. மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். (ஓ-35)

## வேர்ல்ட் விஷனால் உணவு விநியோகம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் வேர்ல்ட் விஷன் நிறுவனம் சமுர்த்தி முத்திரை -நலிவுற்றோர் நிவாரணம் பெறத் தவறியவர்களுக்கு அரிசி, சீனி, பருப்பு, தேங்காய் எண்ணெய், மீன்ரின், தேயிலை போன்ற உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ஓ-134)

## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு அருள்மிகு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் "மேதைகள் காட்டிய பாதை" என்ற தலைப்பில் சைவப் புலவர் கீழ்க்கரை சி.நவரத்தினம் ஆசிரியர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-35)

## அடிக்கல் நாட்டுவிழா

வடகிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் பருத்தித்துறையில் நவீன சந்தையை அமைப்பதற்கு நிதி ஒதுக்கி வழங்கியுள்ளது. இந் நவீன சந்தையின் முதற்கட்ட நிர்மாணத்திற்கென 80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையப் பிரதேசத்தில் அமையவுள்ள இந் நவீன சந்தைக்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று சனிக்கிழமை பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் ஏ.ஏ. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். அரச அதிபர் கே. கணேஷ் சந்தைக்கான அடிக்கல்லைச் சம்பிரதாயபூர்வமாக நாட்டிவைப்பார். (ஓ-35, 52)

## கலை இலக்கிய விழா

வலிகாமம் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கிய விழா பிரதேச செயலக கலாசார மண்டப திறந்த வெளியரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் வலிமேற்கு பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவின் முதல் அமர்வு நிகழ்வுகள் முற்பகல் 9 மணி தொடக்கம் 12 மணிவரையும் இரண்டாம் அமர்வுநிகழ்வுகள் பிற்பகல் 1.30 தொடக்கம் 5.30 மணிவரையும் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி,வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,கௌரவ விருந்தினர்களாக வலி .மேற்கு பிரதேச சபை செயலாளர் க.புத்திசிகாமணி,சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரு அமர்வுகளிலும் இசை, நடனம் ,நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (ஓ-27, 17)

## 'சிப்தொற' புலமைப்பரிசிலுக்கு தெரிவானோர் விபரம்

சமுர்த்தி "சிப்தொற" இரண்டாம் நிலைக் கல்விப் புலமைப் பரிசிலிற்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களின் விபரம் வருமாறு,

ஆர் அனுஷா, என். ஆரூரன், என். துஜிதா, வி.பிரியலதா, ஏ.பிரசாந்தினி, எஸ். கோபிகா, எஸ்.சக்தியா, வி.அனித்தா, எஸ். சிவசங்கர், எஸ்.சர்வேஸ்வரன், எஸ்.தேனுஷா, பி.மிதுலா, ரீ.லேனாக, ரீ.சர்வேந்திரா, ஜெ.மயூரன், ரீ.வைஸ்ணவன், என். நளினா, எஸ். கவிப்பிரியா, கே. அபர்ணா, என். ஜெயக்குமார். (ஓ-52)








பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முன்பள்ளி விளையாட்டு விழாவில் சிறுவனொருவன் இறைகீதம் இசைப்பதையும், அருகில் டாக்டர் எஸ்.சுந்தரமூர்த்தி , வர்த்தகர் பீ. இராசதுரை, இளைப்பாறிய தபாலதிபர் எஸ்.கோபாலசாமி, பிரதம விருந்தினரான தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் கே.யோகநாதன் ,இளைப்பாறிய பொறி யியலாளர் எஸ்.நடனசபாபதி ஆகியோர் நிற்பதையும், டாக்டர் எஸ்.சுந்தரமூர்த்தி உரையாற்றுவதையும் ,நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கி உதவி முகாமையாளர் கே.ஜெயபாபு விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்குப் பரிசில் வழங்குவதையும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பீ.இரகுவரன் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பரு.நிருபர்)

# நோத்முதல் கோபல்லவா வரை 90



### இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்

இவ்வாறான முன்னேற்றங்கள் பல ஏற்பட்ட பின்னரும் அவற்றுக்கு அமையச் சட்டசபையில் திருத்தங்கள் ஏற்படவில்லை. முன்னர் இலங்கையருக்கு ஆங்கில அறிவோ அல்லது ஆங்கிலேயரின் பாராளுமன்ற அரசியலனுபவமோ இல்லாத காலத்தில் அமைக்கப்பட்ட வகுப்புவாத ரீதியிலமைந்த பிரதிநிதித்துவ முறை இப்போது



பொன் குமாரசுவாமி

ஆயிரம் மக்களுள் 350 பேர் கல்வியறிவு பெற்ற பின்னும் மாற்றியமைக் கப்படாமலே இருந்தது. பழைய வகுப்பு வாதப் பிரதிநிதித்து வமும் மக்கள் தொகைக்குத் தக்கதாகத் தானும் மாற்றியமைக்கப்படவில்லை. ஓரினத்துக்கு ஒருவர் என இலங்கையருக்குக் கொடுக்கப்பட்ட பிரதி நிதித்துவ முறை மேலும் பொருந்தாத அமைப்பிலேயே இருந்தது. அது 14 இலட் சத்து 58 ஆயிரம் சிங்களவருக்கு ஒருவரும் 23 ஆயிரம் பறங்கியருக்கு ஒருவரும் என்ற கணக்கி லேயே இருந்தது.

இன்னும் 1906 ஆம் ஆண்டில் இருந்த நிலைமையை விரித்துரைக்கின் அன்றும் பரிபாலனப் பொறுப்பு ஆள்பதி அவர்களிடமே இருந்தது. அவருக்கு ஆலோசனை

**மீள் பார்வை**

கூறுவதற்குச் சட்ட நிர்வாக சபை இருந்தது. இந்தச் சட்ட நிர்வாக சபையினர் கூட சட்ட சபையின் உத்தியோகஅங்கத்தவரில் இருந்து ஆள்பதியின் அபிமானத்துக்குரிய அங்கத்தவரிலிருந்தே தெரியப்பட்டார்கள். அவர்களும் ஆள்பதி அவர்களுக்குச் சார்பான ஓர் உட்குழுவினராயே இருந்தனர்.

சட்டசபையில் 17 அங்கத்தவரிருந்தனர். அவர்களுள் 9பேர் உத்தியோக அங்கத்தவரும், 8 பேர் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளுமாவர். உத்தியேர்க அங்கத்தவர் பெரும்பாலும் மேலுத்தியோகம் வகித்த வெள்ளையராயே இருந்தனர். அவர்கள் நிலை பின்வருமாறு,

1. குடியேற்றச் செயலாளர்
2. இறைசேரித் தலைவர்
3. வருமானத் தலைவர்
4. பிரதம படைத் தலைவர்
5. சட்டத்துறை நாயகம்
6. மேல் மாகாண அதிபர்
7. மத்திய மாகாண அதிபர்
8. வேறு யாராவது பெரிய உத்தியோகத்தர்-2

**உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் எண் மரும் பின்வருவோராவர்.**

1. கரைநாட்டுச் சிங்களப் பிரதிநிதி -1
2. கண்டி நாட்டுச் சிங்களப் பிரதிநிதி -1
3. தமிழர் பிரதிநிதி -1
4. முஸ்லிம் பிரதிநிதி -1
5. பறங்கியர் பிரதிநிதி -1
6. ஐரோப்பியர் பிரதிநிதி -1
7. தோட்டத்துறைப் பிரதிநிதி -1
8. வர்த்தகத்துறைப் பிரதிநிதி -1

இவர்களுள் ஏழாம் எட்டாம் இலக்கத்தில் குறிக்கப்பட்டவர்கள் அவ்வவ் சங்கங்களின் தகவுரையின் வண்ணம் ஆள்பதி அவர்களால் நியமிக்கப்பட்டவராய் இருந்தனர். ஏனையோர் ஆள்பதியின் விருப்பத்தின் வண்ணம் நியமிக்கப்பட்டவராவர்.

ஆள்பதி அவர்களின் ஆலோசனைச் சபை எனப்பட்ட சட்ட நிர்வாக சபை அங்கத்தவர் முன் சொன்ன உத்தியோக அங்கத்தவர்களிலிருந்தே நியமிக்கப்பட்டனர். அத்திருக் கூட்டத்தில் உத்தியோகப் பற்றற்றவர் எவரேனும் இருக்கவில்லை. அன்றி இலங்கையர் எவராவது நியமிக்கப்படவும் இல் லை. அத்தகைய சட்டசபையின் அமைப் பைப் பின்வரு மாறு வகுப்பர்.

சட்டசபை
17

உத்தியோக அங்கத்தவர் 9 | உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் 8

சட்டநிருவாக சபை
5

இக் காலத்தில் இலங்கையின் குடிசன 39 இலட்சத்து 68 ஆயிரத்து 541 எனவும் வருமானம் 3 கோடி 50இலட்சத்து 30 ஆயிரத்து 661 ரூபா எனவும் செலவு 3 கோடி26இலட்சத்து 44ஆயிரத்து 215 ரூபா எனவும் பகிரங்கக் கடன்பளு 7கோடி 27 இலட்சத்து 19ஆயிரத்து95 ரூபா எனவும் அறியக்கிடக்கின்றன.

முன்னர் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதியாய் நியமிக்கப் பெற்ற இராமநாதன் அவர்கள் 28.08.1979 தொடக்கம் 15.12.1892வரை சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராயிருந்தார். அவர் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கிச் சட்ட அறிஞர் நாயகம் எனப்படும் சொலிசயிற்றர் ஜெனறலாகப் பதவியேற்றமையால் அவருடைய இடத்தில் அவருடைய தமைய னார் பொன் குமாரசுவாமியவர்கள் 4.2.1893 இல் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதியாகச் சட்ட சபையில் நியமனம் பெற்றார்.

**க.சி.குலரத்தினம்**

பொன்குமாரசுவாமி அவர்களிடமும் அவருடைய பாரம்பரியக் குணங்கள் மிகுதியாய் இருந்தன என்பர் சத்தியம், நேர்மை, தீரம் ,தருமசிந்தனை, தியாகம், தேசப்பற்று, தயை ஆகிய உத்தம நற்பண்புகள் குமார சுவாமியிடம் களிநடம் புரிந்தன எனப் புலவர்கள் போற்றினர். அஞ்சாமை மிக்க அவர் ஆள்பதி அவர்களின் போக்கை வழிப்பறி காரனின் போக்கு எனக் கூறிக் கண்டித்தார் அது.

*"வேலோடு நின்ற னிடுவென் றது போலுங்*
*கோலோடு நின்ற னிரவு"*

என்று திருவள்ளுவரால் கொடுங் கோன் மையில் கூறப்பட்ட தாகும் ஆட்சி முறையில் இங்ஙனம் கண்டிக்கப்பட்ட ஆள்பதி அவர்கள் குமாரசுவாமி அவர்களை மறுமுறை நியமிப்பதில்லை என வஞ்சினங் கொண்டதும் உண்டு. (தொடரும்)

# யாழ்ப்பாண மாவட்ட புத்தாக்கக் கண்காட்சியும் விருது வழங்கும் நிகழ்வும் - 2008

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் புத்தாக்க ஆணைக் குழுவினால் நடத்தப்படும் புத்தாக்கக் கண்காட்சியும் விருது வழங்கும் வைபவமும் செப்ரெம்பர் 16,17ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. .

மேற்படிக் கண்காட்சியில் வலய மட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் புத்தாக்கங்களும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்,கல்வியியற் கல்லூரிகள் .தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் புத்தாக்கங்களும் தனிப்பட்டவர்களின் புத்தாக்கங்களும் காட்சிப் படுத் தப்படவுள்ளது டன் தெரிவுகளும்

| வலயம் | திகதி | நேரம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2008.09.16 | மு.ப10.00 -பி.ப 1.00 |
| வலிகாமம் | 2008.09.16 | மு.ப1.00 -பி.ப 4.00 |
| தென்மராட்சி | 2008.09.17 | மு.ப 9.00 -பி.ப 12.00 |
| வடமராட்சி | 2008.09.17 | மு.ப10.00 -பி.ப 12.00 |
| தீவகம் | 2008.09.17 | பி.ப12.00 -பி.ப 2.00 |

இடம் பெறவுள்ளன்.மேற்படி கண்காட்சியில் தமது புத்தாக்கங்களை காட்சிப்படுத்த ஏற்கனவே பதிவுசெய்தவர்கள் 15.09.2008 (திங்கள்) யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 10 மணிமுதல் பிற்பகல் 3மணிவரை தத்தமது காட்சிப் பொருளுடன் வருகைதந்து தமது வரவை உறுதிசெய்தல் வேண்டும். இதுவரை பதிவுசெய்து கொள்ளாதவர்களும் மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் தமது காட்சிப் பொருளுடன் வருகைதந்து வரவினை உறுதிசெய்துகொள்ளலாம்.

மின்னிணைப்பு தேவையானோர் அதற்கான (Multi plug), மின்சார வயர்கள் ஆகியவற்றையும் மேசை விரிப்பாக 2X2 சதுர அடி வெண்ணிறப் பொலித்தீனையும், அபிப்பிராயங்கள் எழுதுவதற்கான குறிப்பேட்டினையும் கொண்டுவருதல் வேண்டும்.

ஒளிப்படக் கருவிகள்,கைத்தொலை பேசிகள் போன்ற எவையும் கண்காட்சி மண்படத்தினுள் எடுத்துச்செல்லப்பட அனுமதிக்கப்படமாட்டாது. புத்தாக்கங்களை காட்சிப்படுத்தும் பாடசாலை மாணவர்கள் தமது பொறுப்பாசிரியருடன் கலந்துகொள்வதுடன் அவ் ஆசிரியர் மற்றும் பாடசாலை அதிபரினது பெயரையும் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

புத்தாக்கங்களை காட்சிப்படுத்துவோருக்கான தேநீர்,சிற்றுண்டி மற்றும் மதிய உணவு ஆகியவை புத்தாக்க ஆணைக்குழுவினால் வழங்கப்படும்.கீழ்வரும் கால அட்டவணைக்கமைய பாடசாலை அதிபர்கள் தங்களது மாணவர்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளல் வேண்டும்.

மேற்படி புத்தாக்க கண்காட்சியில் யாழ். மாவட்ட புத்தாக்குனர்கள் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் என அறிவுறுத்துவதுடன் பொருளின் உற்பத்திக்கான உரிமத்தை பெற்று தருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் பீடத்தின் தலைவர் கலாநிதி சிவயோகன் அறிவித்துள்ளார். (ஓ)

# சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியின் அறிவித்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளை எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல்வரை சனிக்கிழமைகளில் இயங்காது என்று வங்கி முகாமையாளர் சி.தனீஸ்வரன் தெரிவித்தார். (ஓ-29)

# ஆளுநர் சபைக்கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்டக் கிளையின் ஆளுநர்சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் மாவட்டக்கிளை அலுவலகத்தில் நடைபெற வுள்ளது.

இக் கூட்டத்தில் ஆளுநர் சபை உறுப்பினர்கள், பிரிவுத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-134)

# முறைசாராக் கல்வி வேலைத்திட்டம் தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள முறைசாராக் கல்வி வேலைத்திட்டம் தொடர்பான ஆளணியினரின் வாண்மை விருத்தியினை ஏற்படுத்துவதற்காக செயலமர்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 18,19,20ஆகிய திகதிகளில் மூன்று நாட்கள் இச் செயலமர்வு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் கோட்டக்கல்வி அதிகாரிகள், முறைசாராக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டங்களில் முறைசாராக் கல்வி அபிவிருத்தி வேலைக்கென இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அனைவரும் தவறாது பங்குபற்ற ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (ஓ-19)

# கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகவும் கல்லூரியின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கும் யாழ்.மாவட்டத்தில் ஹொக்கி விளையாட்டினை வளர்க்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்டு வரும் கல்லூரியின் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவருமான சு.ஆனந்தரட்ணம் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே முதன் முறையாக மாபெரும் ஹொக்கி சுற்றுப் போட்டி ஒன்றினை இன்று நடாத்தவுள்ளார்கள்.

காலை 8 மணியளவில் கல்லூரி கிறவுண்ட் பீல்ட் மைதானத்தில் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் கோலாகலமாக ஆரம்பமாகும் இன்றைய போட்டியில் யாழ்.பல்கலைக்கழகம், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ். ஸ்ரார் விளையாட்டுக்கழகம், கிறாஸ் கொப்பேர்ஸ் விளையர்ட்டுக்கழகம் ஆகிய நான்கு அணிகள் மோதவுள்ளன.

இச் சுற்றுப்போட்டியானது . கழங்களுக்கிடையே ஓர் புரிந்துணர்வையும் மாவட்ட மட்டத்தில் சிறந்த ஹொக்கி வீரர்களை உருவாக்கி அவர்களை தேசிய அணியில் இடம்பெறச் செய்யும் நோக்கோடு இவ்வாண்டு தொடக்கம் சுற்றுப்போட்டியாக நடாத்தவுள்ளதாக கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் தெரிவித்தார்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் மருதனார்மடம் விவசாயக் கல்லூரி அதிபர் ரி.குகதாசனும், ஆனந்தரட்ணம் ஆசிரியரின் புதல்வியும் யாழ்ப்பா ணக் கல்லூரி ஆசிரியருமான திருமதி டயாளா நிர்மலாவும் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.

கல்லூரி பழைய மாண வர்கள், ஆர்வலர்கள் மற்றும் அனைவரை யும் கலந்துகொண்டு போட்டிகள் சிறப்புற அமைய ஒத்துழைப்பு வழங்குமாறு கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் கேட்டுக்கொள் கின் றார். (ஓ-27)

# யாழ். மாவட்டத்தில் ஹொக்கி விளையாட்டு

## யாழ்ப்பாண ஹொக்கி விளையாட்டின் தந்தை அமரர் தம்பையா ஆனந்தரட்ணம்

யாழ்.விளையாட்டுகளம் தொகுப்பு – ஆர்.யு.பாலமுருகன்

1952ஆண்டு இங்கிலாந்தில் ஒழுங்கமைக் கப்பட்ட ஹொக்கி விளையாட்டு, இன்று உலகம் பூராகவும் விளையாடப்பட்டு வருகின்றது. 1892ஆம் ஆண்டு F.C யக்வுன் என்பவரின் தலைமையில் இலங்கையில் ஹொக்கிப் போட்டிகள் ஆரம்பிக் கப்பட்டது 1900 ஆம் ஆண்டளவில் சர்வதேச ஹொக்கி சங்கம் உருவாக்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பால்லோதே என்பவர் 1924ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி ஹொக்கி விளையாட்டில் ஈடுபட்டு கொண்டிருந்த பிரான்ஸ், ஆஸ்திரியா , பெல்ஜியம், ஹங் கேரி, ஸ்பெயின், செச்கோஸ்லோ லோச்சியா, சுவிசர்லாந்து போன்ற நாடுகளின் பிரதி நிதி களைக் கூட்டி Fedeation Intetna tional De Hockoy (FIH) உருவாக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு அகில இலங்கை ஹொக்கி சங்கம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு ஹொக்கி விளையாட்டுக்கென படிமுறையான வரலாறு காணப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் ஹொக்கி விளையாட்டுக்கென தனித்துவமான வரலாறு இருக்கின்றது.


ஆனந்தரட்ணம்

2ஆம் உலக மகா யுத்தத்தினை தொடர்ந்து மலேசியாவில் இருந்து தாய் நாட்டிற்கு திரும்பி தமது சொந்த பிரதேசமான யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஆனந்தரட்ணம், கனகரட்ணம், செல்வ ரட்ணம் குழுவினரால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் கல்லூரியில் ஹொக்கி விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வகையில் தம்பையா ஆனந்தரட்ணம் என்பவர் மலேசியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த குழுவில் ஹொக்கி விளையாட்டில் முதன்மையாக விளங்கினார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியராகவும் கல்லூரியின் விளையாட்டு துறை பொறுப்பாசிரியராகவும் விளங்கிய ரி.ஆனந்தரட்ணம் அவர்கள் யாழ்ப்பாண கல்லூரியில் சிறந்த ஒரு ஹொக்கி அணி உருவாகுவதற்கு காரணமாக விளங்கினார். அவரின் சிறந்த பயிற்றுவிப்பால் ஆரம்ப காலத்தில் தேசிய ரீதியான சுற்றுப்போட்டிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஹொக்கி அணி பங்கு பற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை பாடசாலைகளின் ஹொக்கி அணியில் பங்கு பற்றிய பிரபல ஹொக்கி விளை யாட்டு வீரர் 'ஹொக்கி பாலா' உட்பட பல ஹொக்கி வீரர்கள் ஆனந்தரட்ணம் ஆசிரியரின் பயிற்றுவிப்பிலேயே சிறப்பு பெற்றனர்.

மிக நீண்டகாலமாக ஹொக்கியை பயிற்றுவித்த இவர் ஓய்வு பெற்ற பின்னரும் யாழ்ப்பாணக் கல்லூரி ஹொக்கி அணிக்காக தனது பயிற்றுவிப்பினை மேற்கொண்டார். ஓய்வுபெற்ற பின்னர் யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவராக இருந்த இவர் 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.


யாழ்ப்பாணக் கல்லூரி பெண்கள் ஹொக்கி அணி

இவருடைய தலைமையிலேயே வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட ஹொக்கி விளையாட்டினை யாழ். மாவட்டத்தில் மேலும் மேலும் விருத்தி அடையும் நோக்கில் தற்போதைய யாழ்ப்பாண கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் அவர்களின் துரித நோக்கு சிந்தனையில் அமரர் ரி.ஆனந்தரட்ணம் ஆசிரியரின் முதலாவது ஆண்டு நிறைவில் 'ஆனந்தரட்ணம் ஞாபகார்த்த அகில இலங்கை கிறிம்ன்ஸ்சன் அன்ட் கோல்ட் ஹொக்கி சுற்றுப் போட்டி' ஒன்றினை பாடசாலை கழகங்களுக்கிடையில் 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தி ஆரம்பித்து வைத்தார்.

இச் சுற்றுப்போட்டி இவ்வருடம் இரண்டாவது தடவையாக கழகங்கள், பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறுகின்றது.

இன்று உலகிலே ஹொக்கி விளையாட்டு நன்கு வளர்ச்சி அடைந்து காணப்படுகின்றது. 1908ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற 4ஆவது ஒலிம்பிக் போட்டியில் ஹொக்கியும் ஒரு விளையாட்டு போட்டியாக சேர்க்கப்பட்டது. கடந்த மாதம் பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஜேர்மனி ஹொக்கிக்கான தங்கப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டது. இவ்வாறு பிரபல்யம் பெற்ற ஹொக்கி விளையாட்டினை யாழ்.மண்ணில் அறிமுகப்படுத்திய பெருமை யாழ்ப்பாண கல்லூரியையே சாரும். யாழ்ப்பாண கல்லூரியை தொடர்ந்து சென்.ஜோன்ஸ் கல்லூரி ஹொக்கி விளையாட்டில் ஈடுபட்டது.


புனித பரியோவான் கல்லூரி ஹொக்கி அணி

முன்னர் யாழ்.மத்திய கல்லூரியில் விளையாடப்பட்டுவந்த ஹொக்கி கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் பெண்களுக்கான ஹொக்கி அறிமுகப்படுத்தப்பட்டது. 1983ஆம் ஆண்டு யாழ்ப்பாண கல்லூரியில் பெண்களுக்கான ஹொக்கி அறிமுகப் படுத்தப்பட்டது.

ஆனாலும் அதை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவில்லை. காரணம் யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கான ஹொக்கி விளையாட்டினை வேறு பாடசாலைகள் ஆரம்பிக்காமையே ஆகும். இவ் வருடம் உடுவில் மகளிர் கல்லூரி, பெண்களுக்கான ஹொக்கியினை அறிமுகப்படுத்தியமை ஹொக்கி ஆர்வாளர்களாலும் ரசிகர்களாலும் வரவேற்கத்தக்கதாகும். யாழ்.மண்ணிலே ஹொக்கி விளையாட்டானது பாடசாலை மட்டத்தைவிட யாழ்.பல்கலைக்கழகத்திலும். சிறப்புற்று காணப்படுகிறது. யாழ்.பல்கலைக் கழகத்திலே ஆண், பெண் இருபாலருக்குமான ஹொக்கி அணிகள் உள்ளன. இதைவிட யாழ். பல்கலைக்கழகவிளையாட்டுவிஞ்ஞான அலகிலும் ஆண், பெண் ஹொக்கி அணி கள் உள்ளன. பாடசாலை, பல்கலைக்கழக மட்டங்களைவிட யாழ்.மண்ணில் கழகங்கள் மட்டத்திலும் ஹொக்கி அணிகள் காணப்படுகின்றன. குறிப்பாக.


பிரான்சிஸ்

| | |
|---|---|
| GRASSHOPPERS | SPORTS CLUB |
| OLD GOLDS | SPORTS CLUB |
| CENTRALITES | SPORTS CLUB |
| KOPAY, U.S | SPORTS CLUB |
| KARAVEDDY | SPORTS CLUB |

போன்ற கழகங்கள் உள்ளன.

யாழ்.மாவட்டங்கள் ஹொக்கி விளையாட்டு அணிகள் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல அகில இலங்கை ரீதியிலான சுற்றுப் போட்டிகளிலும் பங்கு பற்றி வருகின்றன. யாழ். மாவட்ட ஹொக்கி அணியும் யாழ்.பல்கலைக்கழக ஹொக்கி அணியும் அகில இலங்கை ரீதியில் பல போட்டிகளில் பங்கு பற்றியது. முன்னர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி பல தடவை அகில் இலங்கை ரீதியில் பங்குபற்றியது.

**ஏ.சி.பிரான்ஸிஸ்**
**ஆசிரியர், பயிற்றுவிப்பாளர்,**
**யாழ்ப்பாணக்கல்லூரி.**

நீண்ட காலங்களுக்குப் பின்னர் 2004ஆம், 2005ஆம் ஆண்டுகளில் அகில இலங்கை பாடசாலைக்கு இடையான ஹொக்கி போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரியின் ஆண், பெண் இரு அணியினரும் பங்கு பற்றியது.

மீண்டும் இவ்வருடம் யாழ்.மாவட்டத் தில் முதலாம் இடத்தினை பெற்று யாழ்ப் பாணக் கல்லூரியில் ஹொக்கி அணி அகில இலங்கை பாடசாலைக்கிடையிலான தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

மேலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய அணிகளும் பங்கு பெறவுள்ளன.

இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் வளர்ச்சி அடைந்த ஹொக்கி விளையாட்டின் தந்தை என போற்றதக்கவர் அமரர் ரி.ஆனந்தரட்ணம் ஆசிரியரே என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் ஞாபகார்த்தமாக நடைபெற்று வரும் வருடாந்த ஹொக்கி சுற்றுப் போட்டியானது யாழ்.மாவட்டத்தில் ஹொக்கி விளையாட்டின் உறுதியையும் ஐக்கியத்தையும் வளர்த்து வருவதாக அமையும்.

இவ்வாறான ஒரு சுற்றுப் போட்டிக்கு வித்திட்ட யாழ்ப்பாண கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் அவர்களை யாழ்.மாவட்ட ஹொக்கி வீர வீராங்கனைகளும் ஆர்வாளர்களும் என்றும் மறக்க மாட்டார்கள்.

யாழ்.மாவட்டத்தின் ஹொக்கி விளையாட்டின் தரம் மேலும் உயர வேண்டுமாயின் 1973ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட UNDER 23 Junior Nationals க்கு பல இளம் வீரர்களை உரு வாக்க மூத்த உறுப்பினர்கள் பலர் பணியாற்ற வேண்டும் என்பது இன்றைய தேவை ஆகும்.

# அணுசக்தி ஒப்பந்தம் மூலம் இந்தியா அமெரிக்காவுக்கு அடிமை சாசனம்

## இல.கணேசன் கண்டனம்

அணுசக்தி ஒப்பந்தம் செய்ததின் மூலம் அமெரிக்காவுக்கு இந்தியா அடிமை சாசனம் எழுதியது தெளிவாகிவிட்டதாக இல.கணேசன் தெரிவித்துள்ளார். இந்தியா- அமெரிக்கா இடையே அணுசக்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டாலும் இந்தியாவின் அணுகுண்டு சோதனைக்கு எந்த வகையிலும் அமெரிக்கா தடையாக இருக்காது என மத்திய அரசு உறுதி அளித்திருந்தது. இந் நிலையில் அணுகுண்டு சோதனை நடத்தினால் அணுசக்தி ஒப்பந்தத்தை ரத்து செய்து விடுவோம் என்று அமெரிக்கா இரகசிய நிபந்தனை விதித்து இருப்பது தற்போது வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் பா.ஜனதா தமிழக தலைவர் இல.கணேசன் கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

அணுசக்தி ஒப்பந்தம் ஹைடு சட்டத்திற்கு உட்பட்டது. அச்சட்டப்படி அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்து இடக்கூடிய நாடுகள் யுரேனியத்தை பயன்படுத்தி அணு ஆயுத சோதனை செய்யக்கூடாது. அதன் பிரகாரம் அமெரிக்காவுடன் செய்த ஒப்பந்தத்தால் எந்த வகையிலும் இந்தியா அணு ஆயுத சோதனை செய்யக்கூடாது.

இது அணு ஒப்பந்தம் இல்லை. அடிமை சாசனம் என்பது தெளிவாகிவிட்டது. அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு சுதந்திர தின விழாவில் பிரதமர் கொடியேற்றி பேசுவற்கு தகுதி இல்லை. பா.ஜனதா எதிர்ப்பில் இருக்கின்ற நியாயத்தை இனியாவது இந்திய மக்கள்புரிந்துகொள்வார்கள்என்றுநம்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார். (ஓ-6)

# சமுத்திரங்கள் வெப்பமடைவதற்கேற்ப புயல்கள் உருவாகும் அபாயம்

(நியூயோர்க்)


உலக சமுத்திரங்கள் வெப்பமடைவதற்கு ஏற்ப பலமான புயல்கள் மென்மேலும் உக்கிர நிலையடைவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த 25. வருட காலப்பகுதியிலான செய்மதித் தரவுகளின் பிரகாரம் புயல்கள், சூறாவளிகள் மற்றும் சுழல் காற்றுக்கள் சமுத்திரங்களின் வெப்பநிலை அதிகரிப்புக்கு ஏற்ப பலமடைவது கண்டறியப்பட்டுள்ளதாக அமெரிக்கபுளோரிடா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இவர்களது ஆய்வின் முடிவானது "நேச்சர்" விஞ்ஞான பிரசுரத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (ஓ-6)





# கொக்குவில்
# மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
# சித்திரத் திருமஞ்சம்
# வெள்ளோட்ட விழா சிறப்பு மலர்
## 06.09.2008 சனிக்கிழமை பிற்பகல் 2.00மணி



## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

இலங்கா துவீபத்தின் மகுடம் போல் விளங்கும் சைவமும் தமிழும் தளைத்தோங்கும் யாழ்ப்பாண நன்னகரில் கொக்குவில் பதியில் மஞ்சவனப்பதி முருகன் எனும் திவ்ய நாமத்துடன் விளங்கும் முருகப் பெருமானுக்கு அழகிய மஞ்சம் வெள்ளோட்ட விழா (06.09.2008) இன்று சனிக்கிழமை நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

அதை அழகுற செய்த ஸ்தபியினருக்கும் செய்வித்த செ.தம்பித்துரை புவிராஜ் குடும்பத்தினருக்கும் வெள்ளோட்ட விழாக் காணவரும் அடியார்களுக்கும் எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகப்பெருமான் திருவருள் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக. உலகமெல்லாம்"*

**பிரதம குருவும், மஹோற்சவ குருவும்,**
**சிவப்பிரம்ப ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார்.**
**சொ. இ.விக்னேஸ்வரக்குருக்கள்.**

## மஞ்சத்தமர்ந்து அருள் புரிவாய் முருகா

கலியுகவரதனாம் கந்தக் கடவுள் எழுந்தருளியி ருந்து அருள் பாலிக்கும் யாழ்ப்பாணத்திருத்தலங்களுள் ஒன்றாக விளங்குவது கொக்குவில் மஞ்சவனப் பதி ஆலயமாகும்.

இவ்வாலயம் பழைமையும்த புதுமையும்த பல்வேறு சிறப்புக் களையும் பெற்றதாகும். காலத்துக்குக் காலம் உரிய முறைப்படி புனராவர்த்தனகும் பாபிஷே கங்களும் வேண்டிய திருப்பணிகளும் நடை பெற்று வந்துள்ளன.

1938ஆம் ஆண்டிலேயே முதன் முதலாகச் சித் திரத் தேரினை அமைத்து சண்முகப் பெருமான் எழுந் தருளி அடியவர்களுக்கு அருள் பாலித்த நிகழ்வும்த இன்று வரை அச்சித்திரத்தேரே வீதியில் பவனி வருவதும் கண் கொள்ளாக் காட்சியாகும்.

ஆலயத் திருவிழாக்களின் போது முருகப்பெருமான் தேவி யரிருவருடன் திருவீதியுலாவருவதற்கு பல் வேறு வகை வாகனங்களை அன்பர்கள் பலரும் அவ் வக்காலங்களில் அமைத்து உதவியுள்ளனர். இவ் வகையில் பிள்ளையார் தேர், பெரியசப்பறம், கைலாசவாகனம், சண்டேஸ்வரர் தேர் என்பன அடியவர்களால் ஆலயத்திற்கு உவந் தளிக்கப்பட்டுள்ளன.


"மஞ்சவனப் பதிமுருகன் வள்ளி தேவசேனா சமேதராக மஞ்சத்தில் இவர்ந்து திருவீதியுலாவந்து அடியவர்களுக்குக் காட்சிதந்து அருள் பாலிக்கும் நாள் எந்நாளோ?" என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அன்பர்களின் வேண்டுதல்த அப்பெருமான் திருவருள் உந்து தல் காரணமாக கொக்குவிலூர் செல்லையா தம்பித்துரை குடும்பத்தினர் பிள்ளைகளின் சிவகைங் கரியமாக அழகிய சித்திரமஞ்சத் திருப்பணி வேலைகள் இவ்வாண்டு பூரணமாகித வெற்றிவேல் பெருமாளாகிய மஞ்சவனப் பதிமுருகன் தேவகுஞ்சரித வள்ளி நாயகியுடன் மஞ்சத்தமர்ந்து திருவீதியுலா வந்து அருள் பாலிக்கும் நிகழ்வு இவ்வருடப் பெருஞ் சாந்திவிழாவின் போது நடைபெறுவது யாம் அனைவரும் செய்த புண்ணியப் பேறேயாகும்.

2008.09.06. இன்று சனிக்கிழமை நடைபெறும் வெள் ளோட்டத்திலும் 10ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறும் மஞ்சத்திருவிழாவின் போது அடியவர்கள் யாவரும் திரண்டு வந்து கண்களால் அவன் திருவிழாப் பொலிவுகண்டின்புற்றும்த அவன் திருக்கழல் பணிந்து போற்றிப் பேரானந்தப்பெரு வாழ்வும் பெறுவோமாக!

*"அன்பர்பணிசெய்ய எம்மை ஆளாக்கிவிட்டால்*
*இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"*
*"தொண்டர் தம் பெருமை சொல்லலும் பெரிதே"*
*"அன்பர் பணிபோற்றி அரனடி சேர்வோம்"*

**சைவப்புலவர்**
**மு.திருஞானசம்பந்தப்பிள்ளை,**
**தலைவர், அகில இலங்கை**
**சைவப்புலவர் சங்கம்.**

**கொக்குவில்**



## செஞ்சொற்செல்வர் அவர்களின் ஆசியுரை

மகிமை நிறைந்த பதி மஞ்சவனப்பதி. கல்வியால், கலையால், வளத்தால் உயர்ந்து வாழும் திருவூர்கொக்குவில். இத்திரு வூரின் திருவருட் சிறப்புக்கு மூல காரணமாக விளங்கும் மஞ்சவனப்பதி முருகனின் பெரு மையை அறியாதவர்கள் யாருமில்லை. அருள் மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், மஞ்சவனப்பதிமுருகனின்பேரருளைபலதடவை சிறப் பித்துக் கூறியதைப் பலரும் அறிவர்.

காலந்தோறும் இத் திருக்கோவிலில் பல்வேறு திருப் பணிகள் நிறை வேற்றப்பட்டு வருவது சிறப் புக்குரியது. அவ் வகையில் இவ்வாண்டு மஞ்சவனப் பதிமுருகன் திருவீதி வலம் வருவதற்கு அழகிய திருமஞ்சம் உருவாக்கப் பட்ட செய்தியறிந்து மிகவும்ஆனந்தமடை கிறேன். புகழ் பூத்த "சிற்பச் சக்கர வர்த்தி" அமரர் ஆ.ஜீவரத்தினம் அவர்களது புதல்வன் சிற்பவல்லுநர் திரு. ஆ.ஜீ.ஜெயப் பிரகாஸ் அவர்களின் கைவண்ணத் தில் உருவாகியுள்ள மஞ்சத்தில் முருகபபெருமான்திருவலம்வர இருப்பதுசிறப் புக்குரி யது. அல்லும் பகலும்மஞ்சவனப்பதியானின் திருமஞ் சத்திருப்பணிக்கு உழைத்த அமரர் ஸ்ரீமான் தம்பித்துரை முதலியார் குடும்பத்தவர்களின் திருத்தொண்டினைப் போற்றுகிறேன். கடல் கடந்து வாழும் நிலையிலும் தம் குலதெய்வத்தை மறவாத முதலியாரது மைந்தர் களின் நற்பண்பு நன்றிக் குரியது. அருள் நிறைந்த மஞ்சவனப்பதி முருகனின் மஞ்சப் பவனியோடு எம் மண்ணில் அமைதியும் நிம்மதியும் உருவாகப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகிறேன்.

*"யாவர்க்குமாம் என்றும். இன்னுரைதானே'*

**ஆறு திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி**
**தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

## முருகனின் திருவருள் வேண்டி இறைஞ்சுகின்றேன்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதை மதித்து வாழ்பவர்கள் எம் மக்கள். கலியுகவரதன் கந்தப் பெருமான் அருள் பாலித்து விளங்கும் மஞ்ச வனப்பதி முருகன் ஆலயத்தில் அண்மைக் காலங்களின் அறப்பணிகளும் திருப் பணிகளும் அடியவர்களால் நிறைவு செய்யப்பட்டு வருவது போற்றப்பட வேண்டியதாகும்.

2002ஆம் ஆண்டு இராஜகோபுரமாக கும்பாபிஷேகம் அதனைத் தொடர்ந்து எம் பெருமான் அடியவர்க்கு அருள் பாலிக்கும் பொருட்டு கைலாசவாகனம், தீர்த்தமாடுவதற்கு தீர்த்தவாரி, ஆலயத்துடன் தொடர்புடையதாக மங்களகரமான நிகழ்வுகள் நடைபெற ஒரு மண்டபம் என அமைத்து கொடுத்த அடியவர்கள் வரிசையில் எம்பெருமான் வலம் வந்து அருட்காட்சி கொடுக்க திருமஞ்சத்தினை உயர் திரு .தம்பித்துரை புவிராஜ் குடும்பத்தினர் தமது உபயமாக உவந்து வழங்கியிருப்பது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அவருக்கும் அவர்தம் குடும்பத்துக்கும் எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகனின் திரு வருள்கிட்ட இறைஞ்சுகின்றேன்.

**பெ.கனகசபாபதி**
**தலைவர், தே.கூ.சபை யாழ்ப்பாணம்,**
**நல்லூர் ப.கூ.ச.யாழ்ப்பாணம்.**

## அருளாசிச் செய்தி

*முருகன் அடியார்களுக்கு:*

மஞ்சவனப்பதியில் எழுத்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்கு இன்று மஞ்ச ஊர்தி வெள்ளோட்ட விழா நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இறைவனுடைய திருவருளை நிலை நாட்டும் பொருட்டு ஆலய விழாக்களில் சில முக்கியத்துவம் பெறுகின்றது.

இவ்வரிசையில் மஞ்சவனப்பதி முருகனுக்கு மஞ்சம் எடுப்பது சாலப் பொருத்தமாகும். கலியுக வரதனாம் முருகப் பெருமான் வேண்டுவார் வேண்டு வதை ஈயும்பொருட்டு ஆலயத்தில் எழுந்தருளியி ருந்து அருளாட்சி புரிகின்றான். சைவ சமய மக்க ளின் தமிழ் நெறிப் பண்பாடு கொண்ட மக்கள் வாழ்ந்த பிரதேசமாக கொக்குவில் பல ஆலயங்களை கொண்ட பிரதேசமாகும். இங்கு வாழும் மக்கள் ஆன்மீக சிந்தனையோடு வாழ ஆலயங்கள் வழிகாட்டியாக அமைகின்றன. இதனை நெறிப்படுத்தும் வகையில் மஞ்சஊர்தி அமைத்து பெருமை சேர்த்து சிறப்புச் செய்யும் செல்லையா தம்பித்துரை குடும்பத்தினரை வீாழ்த் துகின்றோம் .

இக் கலைப்படைப்பை உருவாக்கிய கலைஞர் பெருமக்களுக்கும் இறைவனுடைய ஆசிகிடைப்பதாக! வெள்ளோட்ட விழாவில் கலந்து முருகனின் அருளைப் பெற்றுமண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

## துன்பம் துடைத்து இன்பம் கொடுப்பீராக

சித்தரிக்கும் மஞ்சத்தில் இறை உலாவருவது மனித மனங்களைத் தெய்வீக நிலைக்கு உயர்த்துவது மனித மனதை தெய்வீக நிலையில் உயர்த்தும் மஞ்சம், சப்பறம், சாத்துப்படி முதலான பணிகளை ஆலயங்களில் செய்பவர்களும் செய்விப்பவர்களும் தெய்வத்தால் ஆசீர்வதிக்கப்படுவர். அழகின் அனுபவத்தில் புலன்கள் ஒன்று படுகின்றன. நாம் அழகில் நிலைக்கும் போது இந்த முழுப்படைப்புமே அதில் ஒன்றுபடுகின்றது. அழகிய மஞ்சத்தில் வெள்ளோட்ட உலாவரும் அழகனாம் முருகனை ஆராதித்து மனித வாழ்வை வளம் படுத்துவோமாக.

அமரர் தம்பித்துரை மஞ்சவனப்பதி முருகனில் மாறாத பக்தி கொண்டு வழிபட்டு வாழ்வை நடத்தியவர். அவரின் புத்திரர்களும் தந்தை வழிநின்று முருகப் பெருமானை ஆராத காதலினால் வழிபாடு செய்பவர்கள் தம் வழிபடும் தெய்வம் மஞ்சத்தில் உலாவர வேண்டும் என்ற பெருவிருப்புக் கொண்டு அவர் கள் மஞ்சத் திருப் பணியை செய்துள்ளனர். மஞ்சவனப்பதி முருகன் மஞ்சத்திலூர்ந்து மக்கள் துன்பம் துடைத்து இன்பத்தைக் கொடுப்பாராக.

**திருமதி நாச்சியார் செல்வநாயகம்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## நல்லூர் பிரதேசசெயலரின் வாழ்த்துச் செய்தி

யாழ். மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு அடுத்த படியாகப் பிரசித்தி பெற்ற தலமாக கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் விளங்குகின்றது. மூர்த்தி, தலம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற இவ் ஆலயம் நூற்றாண்டு காலம் பழமை வாய்ந்ததும் பல சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறப்பட்டதும் ஆகும். ஆண்டாண்டு காலமாக கிராம மக்களாலும் நிர்வாக சபையினராலும் சிறப்பாக பரிபா லிக்கப்பட்டு வரும் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இவ்வருடம் புதிதாக மஞ்சம் அமைக்கப் பெற்றிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

முருகனின் திருவருளினால் இவ்வருடம்தொடக்கம் புதிய மஞ் சத்தில் சுவாமி வலம் வந்து மக்களுக்கு அருளாசி வழங்கி நாட்டில் சாந்தி யும் சமாதானமும் நிலவ அருள் பாலிக்க வேண்டுமென பிரார்த்தித்து மஞ் சம் சிறப்புற அமைக்க பாடுபட்ட ஆலய நிர்வாக சபையினரையும் கிராம மக்களையும் வாழ்த்துகின்றேன்.

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

பிரதேச செயலகம்,
நல்லூர்.

**பா.செந்தில்நந்தனன்**
**பிரதேச செயலர், நல்லூர்.**

**மஞ்சவனப்பதி தர்மகர்த்தா சபையினரும்,**
**மஞ்சத் திருப்பணி உபயகாரரும்**

# சர்வாதிகார ஆட்சியை தோற்கடிப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் அடங்கிய போராட்டம்

## வெகுவிரைவில் வெடிக்குமென் ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பினை மதிக்காது சர்வாதிகார ஆட்சியினை நடத்தும் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளையும், அமைப்புக்களையும் உள்ளடக்கிய போராட்டம் வெகுவிரைவில் வெடிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும், கண்டி மாவட்ட எம்.பி. யுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் கட்சிகளை பிளவுபடுத்தும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார், கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, தமது அரச வளங்களையும் அரச பயங்கரவாதத்தையும் முழுமையாக பயன்படுத்தி நாட்டையே அதல பாதாளத்தில் தள்ளியுள்ள சர்வதிகார ஆட்சியை தோல்வியடையச் செய்வதற்கான காலம் கனிந்து விட்டது.

அன்று ஜே. வி. பி. வரவு செலவு திட்டத்தை தோல்வியடையச் செய்திருக்குமானால், நாடும் மக்களும் இன்றைய நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள்.

சர்வாதிகார ஆட்சியை தோல்வியடையச் செய்வதற்காக அனைத்து அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் உட்பட அனைத்து தரப்பினருடனும் ஐ.தே. கட்சி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இதன் மூலம் அமைக்கப்படும் பரந்தளவான அமைப்பின் மூலம் ஆட்சியை தோல்வியடையச் செய்வோம்.

அது மட்டுமல்லாது அரசியலமைப்பை மதிக்காது 17ஆவது திருத்தத்திற்கு அமைய சுயாதீன குழுக்களை நியமிக்காதுள்ள ஜனாதிபதியை கண்டித்தும் அவற்றை அமைக்குமாறு கோரியும் போராட்டத்தை முன்னெடுப்போம். அரசியலமைப்பை மட்டுமல்ல மாகாண சபைகள் சட்டத்தையும் மீறி ஜனாதிபதி செயற்படுகின்றார்.

மாகாண சபைகளுக்கு தெரிவாகும் முதலமைச்சர்கள், உறுப்பினர்கள், ஆளுநர்கள் முன்னிலையிலேயே சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும்.

இந்த விதிமுறை மீறப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கு தெரிவானவர்கள் ஜனாதிபதி முன்னிலையிலேயே சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொள்கின்றனர்.

அனைத்து அதிகாரங்களையும் தன்னோடு வைத்திருக்க முனையும் ஜனாதிபதி எவ்வாறு அதி காரத்தை பரவலாக்குவார். ஒரு போதும் இது நடக்கப் போவதில்லை என்பதுதான் உண்மையாகும். நாட்டுக்காக ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்தவே அரசாங்கத்துடன் இணைக்கின்றோமென கூறிய ஐ.தே.கட்சியின் 17பேர் இன்று என்ன செய்கிறார்கள்.

சிறப்புரிமைகளை அனுபவித்துக் கொண்டு மக்கள் மீது சுமைகளை சுமத்திக் கொண்டு மௌனமாக இருக்கின்றார்கள். இது தான் அவர்கள் நாட்டுக்காக செய்யும் சேவையாகும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாது ஜனாதிபதி அரசியல் கட்சிகளை பிளவுபடுத்தும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளார்.

அதற்கமைய எமது கட்சியில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் சதி முயற்சி முன்னெடுக்கப்படுகிறது. அதற்காகவே எமது உறுப்பினர்கள், அரசுடன் சேரவுள்ளதாக பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. எமக்குள் கருத்து வேறுபாடுகள், விவாதங்கள் உள்ளன. அவற்றைநாம் பேசித்தீர்த்து பொதுவான இணக்கம் காண்போம்.

எனவே, எமது உள்ளகப் பிரச்சினைகள் தொடர்பில் ஏனையோர் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.

சில அரச மற்றும் தனியார் ஊடகங்களில் ஐ.தே. கட்சிக்கு எதிராக பிரசுரிக்கப்பட்ட உண்மைக்கு புறம்பான செய்திகள் தொடர்பில் நீதி மன்றம் செல்லவுள்ளோம் என்றார். (இ)

# ஐக்கிய தேசிய கட்சியினர் அரசாங்கத்துடன் இணைவார்களாயின் அதற்கு இடமளிப்போம்

## அமைச்சரவை பேச்சாளர் அனுர பிரியதர்சன யாப்பா

(கொழும்பு)

படையினரின் மனிதாபிமான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்ற நிலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் சிக்கியுள்ள அப்பாவி பொதுமக்களை அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வருகை தருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, ஐ.தே.கவைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்துடன் இணைய விரும்பினால் அதற்கு இடமளிக்கப் படும் என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான அனுர பிரியதர்சனயாப்பா தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த செய்தியாளர் மாநாட் டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் கூறியதாவது, ஐக்கிய தேசியக்கட்சிக்குள் உள்வீட்டு முரண்பாடுகள் இருக்கின்றமையை நாம் அறிவோம். தேர்தல்களில் தோல்வியடைந்ததையடுத்து இந்த முரண்பாடுகள் அதிகரித்துள்ளனவே தவிர முரண்பாடுகளை நாம் தோற்றுவிக்க வில்லை.

இரு மாகாண சபைகளுக்குமான வாக்களிப்புகள் சுமுகமான முறையில் நடைபெற்றதாக தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சி யினர் தேர்தல் பெறுபேறுகள் வெளியானதையடுத்து திக்குமுக்காடி விட்டனர்.

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்துடன் இணைவார்களாயின் அதற்கு இடமளிப்போம். அவ்வாறு வருவார்கள் என்ற நம்பிக்கையும் எமக் குண்டு. அவர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குவது தொடர்பில் பின்னர் யோசிப்போம். அது தொடர்பில் பதற்றமடையவேண்டிய தில்லை.



தேர்தல்களில் மோதல்கள் இடம்பெற்றிருக்குமாயின் அவை தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டால் சுயாதீன நீதிமன்றத்தின் மூலமாக விசாரணைகளை மேற்கொண்டு தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் எதிர்காலத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பில் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவில்லை என்பதுடன் ஆலோசனைக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் 17ஆவது அரசியலமைப்பு சீர் திருத்தத்தை அமுல் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (இ)


GODS OWN CHILDREN
SCHOOL FOR THE SPECIAL CHILD
Reg. No: N(A) 1379

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு

EUROPEAN UNION

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன்

GODS OWN CHILDREN

விசேட பாடசாலைகளின்

சித்திரம், கைவேலைக் கண்காட்சி

2008ஆம் ஆண்டின் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அரியாலை, சித்தன்கேணி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இயங்கி வரும் அரச,மத சார்பற்ற GODS OWN CHILDREN FOUNDATION (அறக்கொடை நிதியம்) விசேட சிறுவர்களுக்கான பாடசாலைகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் நடாத்தும் 350இற்கும் அதிகமான விசேட சிறார்கள் பங்கேற்கும் சித்திரம், கைவேலை கண்காட்சி

இடம்: இளம் கலைஞர் மன்ற மண்டபம், நல்லூர், யாழ்ப்பாணம்.

திகதி: 07.09.2008 ஞாயிற்றுக்கிழமை
08.09.2008 திங்கட்கிழமை

நேரம்:
காலை 9.00 தொடக்கம்
மாலை 4.00 வரை

அனைவரும் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட யாழ் மழலைச் செல்வங்களை ஊக்குவித்து கண்காட்சியை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

GODS OWN CHILDREN OFFICE
No:140, Temple Road, Jaffna.
Phone: 021 222 5796
web: www.godsownchildren.com
e-mail: gods.ownchildren@gmail.com



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள் - 2007

01. கலைமுதற் தேர்வு -2006

மேற்படி பரீட்சையை 15.10.2008 (புதன்கிழமை) தொடக்கம் 01.11.2008 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் , கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மற்றும் வவுனியா வளாகத் திலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 08.10.2008 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
04.09.2008.

(சி/1503)

துறவு என்பது ஒரு வெளி வேடமல்ல; அது உள்ளத்தில் நிறைவேற வேண்டிய வெற்றியாகும். – ராஜாஜி

வலம்புரி

# புத்தபிரானின் போதனையும் புத்தபிக்குவின் பாதகச் செயலும்

கொழும்பு கிராண்ட்பாஸ் முத்துமாரி அம்மன் கோவிலிலுள்ள விக்கிரகங்கள் புத்தபிக்கு ஒருவரினால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ள செய்தி உலகு வாழ் இந்துக்கள் அனைவருக்கும் பெருந்துயரைக் கொடுத்துள்ளது.

முதல் நாள் குடமுழுக்கு செய்யப்பட்ட அம்மன் ஆலயத்திற்குப் பிரஸ்தாப பிக்கு தலைமையில் சென்ற கோஷ்டி ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த அம்மனை உடைத்துச் சேதமாக்கியதுடன் சிவலிங்கத்தையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளது.

எந்த மதம் சார்ந்த மனிதனும் செய்ய நினைக்காத–செய்ய அஞ்சுகின்ற கொடுமையை பௌத்த பிக்கு ஒருவர் செய்துள்ளார் எனில் அவரின் மிருகத்தனமான வக்கிர புத்தியை எங்ஙனம் திருத்துவது?

குடமுழுக்குச் செய்யப்பட்ட அம்மனை சேதப்படுத்துவதன் மூலம் இந்துக்களின் மனங்களைப் புண்படுத்தலாம் என எவர் எண்ணிலாலும் அதன் பாதக விளைவை உரியவர்கள் அனுபவித்தே தீர வேண்டும்.

அம்மன் சிலையைச் சேதப்படுத்தியமை தனித்து மதம் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல; அதற்கு அப்பால் இந் நாட்டில் பேரழிவு ஏற்படப் போவதன் அறிகுறியாகக் கூட அதனைக் கருத முடியும்.

தெய்வ நிந்தனைக்குப் பரிகாரம் என்பது ஒரு போதும் கிடையாது. அது காலாகாலமாக உரியவரின் சந்ததியை, இனத்தை, குலத்தை சபித்துக் கொண்டேயிருக்கும். இந்த உண்மைகளை நாம் யதார்த்தத்தில் காண்கின்றோம்.

இலங்கையைக் கைப்பற்றிய ஐரோப்பியர் தமது மதங்களை பரப்புவதற்காக இந்து ஆலயங்களை இடித்துத் தகர்த்தனர். இந்து ஆலயங்களை இடித்து தகர்த்ததன் மூலம் இந்து மதத்தை அழிக்க முடியும் என அவர்கள் கருதினர்.

ஆனால் அவர்களின் நினைப்புக்கு மாறாக இந்துக்களிடையே இந்து சமயக் கொள்கைகளும் இறைநம்பிக்கையும் வேகமெடுத்தது. ஒவ்வொரு இந்துவின் வீடுகளும் ஆலயமாக மாறின. இந்த உண்மையை ஐரோப்பியர் மறந்திருந்தாலும் முத்துமாரி அம்மன் ஆலயத்தை இடித்த பிக்கு நினைவில் கொண்டிருந்தால் அவரின் எதிர்கால இம்மை, மறுமைவாழ்வுக்கு அது உதவியாக இருந்திருக்கும்.

ஒரு காலத்தில் ஈழத்துச் சைவ ஆலயங்களை இடித்த ஆங்கிலேயர் இன்று தமது பிரித்தானியத் தாய் மண்ணில் கிறிஸ்தவ ஆலயங்களை விற்பனை செய்கின்றனர்.

இதில் அதிசயமான உண்மை என்ன வெனில், அந்த கிறிஸ்தவ ஆலயங்களை ஈழத்திலிருந்து பிரித்தானியாவுக்குச் சென்ற சைவத் தமிழர்கள் விலைக்குப் பெற்று அவற்றை சிவ ஆலயங்களாக மாற்றி லண்டன் மாநகரிலே தேர் ஓட்டுகின்றனர். எப்படியிருக்கின்றது நிலைமை? 1515களில் ஈழத்தில் நடந்த சைவ ஆலய இடிப்பின் விளைவு 2000 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் நடந்தேறுகின்றது.

இந் நிலைமை இன்னமும் முடிந்து போகவில்லை. இதுவே தெய்வ நிந்தனையின் விளைவாகும். ஆக. சட்டத்தின் முன், ஆலயத்தை உடைத்த பிக்கு மனநோயாளி என்று கூறிக் கொள்ளலாம்.

ஏன் பிக்குகளில் அரைவாசிப் பேருக்கு மன நோய் என்று கூடக் கூறி செய்த குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் செய்த வினைப் பயனிலிருந்து எவருமே தப்பித்துக் கொள்ள முடியாது. இதுவே நியதியும் நிலைத்த உண்மையும் ஆகும். இந்த உண்மை என்றோ ஒருநாள் நடந்தேறும்.

# அரசு போரைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் உதவி அளித்து வருகின்றது

## அருட்தந்தை பேராசிரியர் இம்மானுவேல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இன அழிப்பு, பல தசாப்தங்களாக அவர்கள் எதிர்நோக்கியுள்ள துயரங்கள் தொடர்பில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் பொறுப்புணர்வுடன் செயற்படவில்லை என வன்னிப் பிரதேசத் தின் முன்னாள் குரு முதல்வர் அருட் தந்தை பேராசிரியர் இம் மானுவேல் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியிலிருந்து சர்வதேச சமூகத்திற்கு எழுதியுள்ள பகிரங்கக் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதோடு, செறிவான ஆட்டிலறி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போர் நடைபெறும் பிரதேசங்களில் சர்வதேச ஊடகங்களின் செயற்பாட்டிற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வன்னியின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அரச நிர்வாக உயர் அதிகாரிகள் கூட அப்பிரதேசத்திலிருந்து மீள அழைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இவ்விரு மாவட்டங் களும் படையினரின் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்துள்ள பெருந்தொகையான மக்களால் நிரம்பியுள்ளது.

அரசாங்கம், தமிழ் மக்கள் இலங்கை பிரஜைகள் அல்ல என்ற நிலையிலேயே செயற்பட்டு வருகின்றது. அரசாங்கத்தின் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் எதிரி நாட்டின் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் முற்றுகையைப் போன்றுள்ளது.

அரசாங்கம் போரை சில மாதங்களில் முடித்து விடலாம் என நம்பிக்கொண்டிருக்கும் நிலையில், தமிழ் மக்கள் அடிப்படை உரிமைகளுக்காகக் கோரிக்கை விடுத்த வண்ண மிருக்கின்றனர்.

எனினும், ஜோர்ஜியா விடயத்தில் மிகுந்த அக்கறை காட்டிய சர்வதேச சமூகம், இலங்கை விடயத்தில் மௌனத்தையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது.

தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக எதிர்நோக்கி வருகின்ற மோசமான துயரங்களுக்கும் தற்போது அவர்களுக் கெதிராக மிக மெதுவாக மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர் பாகவும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சக்திகள் தமது அடிப்படை பொறுப்பை உணர்ந்து செயற்படவில்லை.

அரச பயங்கரவாதம், மனித உரிமை மீறல்களை கண்டும் காணாமல் உள்ள சர்வதேச சமூகம், இலங்கை அரசாங்கம் தனது போர் இயந்திரத்தை மேலும் வலுப்படுத்திக்கொள்ளத் தொடர்ந்தும் உதவியளித்து வருகின்றது. (ஓ)

# 1500 மில். அமெ.டொலர் செலவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்க முடிவு

## அமைச்சர் பௌசி

(கொழும்பு)

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் அதில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்பதுடன் அவை அசாதாரணமாகும்.

1500 அமெரிக்க டொலருக்கு குறைவான செலவில் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்க முடியாது என்று அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நாளொன்றுக்கு 1400 மெற்றிக்தொன் எண்ணெய் சுத்திகரிக்க முடிகின்றது.

எனினும் 5000 மெற்றிக்தொன் எண்ணெயை உற்பத்தி செய்ய வேண்டும் அதனை சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தில் செய்ய முடியாது என்பதனால் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கவுள்ளோம்.

கூடிய இலாபத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தனியார் மயப்படுத்தாமல் நிர்வாகத்தை நாமே வைத்துக் கொண்டு இந்த சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கப் போகின்றோம்.

அதற்கு 1500 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது அதற்கு குறைந்த செலவில் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்க முடியாது.

எண்ணெய் சுத்திகரிப்பதன் மூலமாக மாதம் ஒன்றுக்கு 600மில்லியன் அமெரிக்க டொலர்களையே இலாபமாக பெற்றுக்கொள்ள முடிகின்றது. மாதம் 50ஆயிரம் பெரல் மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்படுகின்றது அதனை ஒரு இலட்சமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு பெரல் மசகு எண்ணெயை சுத்திகரிப்பதற்கு 30 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவாகின்றது. 1500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் அதிகரிக்க முடியாது என்று ஈரானுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதுடன் நிர்மாணிக்கும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. (ஓ)

# இவ்வருட இறுதியிலிருந்து உள்ளூர் எரிவாயு விற்பனைக்கு விடப்படும்

(கொழும்பு)

உள்ளூரிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 50 மெற்றிக் தொன் காஸ் தயாரிக்கப்படுகின்றது. இந்த தொகையை அதிகரித்து டிசம்பர் மாதம் முதல் உள்ளூர் காஸ் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் தலைவர் அஜந்த டி மெல் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

உள்ளூரிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற காஸை குறைந்த விலையில் இவ்வருட இறுதியிலிருந்து விற்பனை செய்வதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

காஸ் சிலிண்டரை பெற்றுக்கொள்வதற்கான விலை மனுக்கோரப் பட்டுள்ளது. என்பதுடன், உள்ளூரில் காஸ் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முத்துராஜவெல எண்ணெய் களஞ்சிசாலையில் எண்ணெய் களஞ்சியப்படுத்துவதன் மூலம் கப்ப லொன்றிற்கு 25ஆயிரம் ரூபா இலாபமாக கிடைக்கின்றது. சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிக்கின்ற போதெல்லாம் உள்ளூரில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட வில்லை. அவ்வாறு அதிகரித்தால் நுகர்வோர் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். மண்ணெண்ணெய் லீற்றர் 85 ரூபாவிற்கு விற்கப்படுகின்ற போதும், லீற்றருக்கு 35ரூபாவும் டீசல் லீற்றருக்கு 5ரூபாவும் நட்டம் ஏற்படுகின்றது. பெற்றோல் லீற்றருக்கு மட்டுமே 8ரூபா இலாபம் கிடைத்துள்ளது. (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## ஆளுமையின் முக்கியத்துவம்



நமது குடும்பங்களில் தலைவர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் வெற்றிபெறுகின்றனர், சிலர் பெறுவதில்லை. ஏன்? நாம் தோல்வியுறும் போது பிறரைக் குறை கூறுகிறோம். நாம் வெற்றி பெறாத அந்தக் கணமே நமது தோல்விக்கும் காரணம் இவர் தான் என்று ஒருவரைக் காட்டிவிடுகிறோம். தோல்வியுறுகின்ற யாரும் தனது சொந்தக் குற்றங்களையும் பலவீனங்களையும் ஒப்புக் கொள்ளவிரும்புவதில்லை. தன்னைக் குற்றம் அற்றவனாகக் கருதவும், குற்றத்தைப் பிறர் மீதோ பிறபொருளின் மீதோ ஏன் துரதிஷ்டத்தின் மீதாவது சுமத்தவுமே ஒவ்வொருவனும் முயல்கிறான். குடும்பத் தலைவர்கள் தவறும் போது சிலர் குடும்பத்தை நன்றாக நடத்துவதற்கும் பிறர் அவ்வாறு நடத்தாதற்கும் காரணம் என்ன என்பதைக் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டும். வேறு பாட்டிற்குக் காரணம் மனிதனே அவனது குணச் சிறப்பே அவனது ஆளுமையே என்பதை அப்போது காண்பீர்கள்.

# அவரைப் பயிர்ச்செய்கையில் உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள்


யாழ்.குடாநாட்டு மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு விலங்குப் புரதம் அருகி வரும் நிலையில் கடல் உணவிற்கும் தட்டுப்பாடு நிலவி வருவதனால் இப் புரதத் தேவையை நிவர்த்தி செய்ய தாவரப் புரதத்தினை அதிகளவு கொண்ட அவரைப் பயிர்களையும், நிலக் கடலையையும் உற்பத்தி செய்வது விவசாயிகளின் பணியாக வுள்ளது.


இங்கு தரிசாகவுள்ள நிலங்களையும், நெல் அறுவடையின் பின் அவ் நிலங்களையும் பயன்படுத்தி இப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்கூடாக வெற்றிகரமாக புரதத் தேவையை நிவர்த்தி செய்ய முடியும்.

மேலும் இதற்காக பெருமளவு நிதி வெளிமாவட்டத்திற்கும் போக்குவரத்துக்குமாக செலவாவதைத் தடுக்கலாம். அத்துடன் தற்போதைய விலையைவிடக் குறைந்த விலையில் நுகர்ச்சியாளர்களுக்கு புரதத் தேவையை வழங்க முடியும்.

எனவே அவரைப் பயிர்ச் செய்கையிலும் நிலக்கடலைப் பயிர்ச் செய்கையிலும் அனைத்து விவசாயிகளும் ஈடுபடுவதால் பொருளாதார ரீதியில் எமது மாவட்டம் முன்னேறுவதுடன் தரமான போசணையை மக்களிற்கு வழங்கக் கூடியதாகவுமிருக்கும். மேலும் இப் பயிர்ச்செய்கை மூலம் இலங்கை அரசாங்கம் வழங்கும் வழிவகை செய்வதனால் வெளி மாவட்டத்திலிருந்து விலங்குணவுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய தேவையை தவிர்க்கலாம்.


நிலக் கடலை:- திஸ்ஸ


கௌபீ :- வருணி


பயறு :-எம்.ஐ-6

சி.சிவகுமார்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

எனவே அவரைப் பயிர்ச் செய்கையை வெற்றிகரமாக மேற்கொண்டு எமது மாவட்ட மக்களின் புரதத் தேவையினை குறைவான விலையில் நிவர்த்தி செய்ய முடியும்.

# யாழ்.குடாநாட்டில் பாதீனியத்தின் பரம்பல்

யாழ்.குடாநாட்டின் விவசாய நிலங்களை "பாதீனியம்" எனும் நச்சுச் செடி மிக வேகமாக ஆக்கிரமித்து வருகின்றது. இந்திய அமைதிப்படையினர் தமது உணவுத் தேவைக்காக கொண்டு வந்த செம்மறி ஆட்டின் உடலில் ஒட்டியிருந்த "பாதீனியம்" விதைகளினாலேயே இக் கொடிய களை இலங்கையினுள் ஊடுருவியது. இதன் பிறப்பிடம் மெக்சிகோ மற்றும் அமெரிக்கா ஆகும். எனினும், இதன் பரம்பல் இந்தியா, அவுஸ்திரேலியாவிலேயே அதிகம்.

இதன் வேகமான பரம்பலானது விளை நிலங்களின் விளைச்சலைக் குறைப்பதுடன் மட்டுமல்லாது இதன் விதைகள் விளை பொருட்களுடன் கலப்பதனால் அதன் தரத்தினையும் குறைத்து விடுகின்றது.

பாதீனியத்தை உணவாக்கும் கால் நடைகளுக்கு வயிற்று உபாதைகளை ஏற்படுத்துவதுடன் மனிதனுக்கு ஆஸ்மா மற்றும் தோல் அரிப்பு நோய்களையும் ஏற்படுத்துகின்றது.

நீர் நிலைகளைச் சுற்றி வளரும் பாதீனியம் செடிகளின் வேர்த் தொகுதியினால் சுரக்கப்படும் சுரப்பிகளினால் நீர் நிலைகள் மாசடைவதுடன் அதனைப் பயன்படுத்த முடியாமலும் போகும்.

பாதீனியமானது 90 Cm உயரம் வரை வளரக்கூடியது. அத்துடன் 20 000-25000 வரையிலான விதைகளை உற்பத்தி செய்யக் கூடியது. இதன் விதைகள் வீரியமான முளைதிறனைக் கொண்டிருப்பதுடன் காற்றினால் மிக நீண்ட தூரத்திற்கு பரம்பலடையக் கூடியனவாகவும் உள்ளது.

இதன் பரம்பல் July -September மாதங்களில் அதிகமாக இருக்கும்.

பாதீனியம் செடியானது முளைத்து ஒரு மாதத்தினுள் பூக்கும் ஆற்றலை பெற்று விடும். $20^\circ$-$25^\circ$ C வெப்பநிலை இதன் வளர்ச்சிக்கு ஏற்றது. இதன் விதைகள் 7 வருடங்களுக்கு முளைதிறனைக் கொண்டிருக்கும். (One year seedling, seven year weeding) இதன் வேர்த் தொகுதியினால் சுரக்கப்படும் நச்சுப் பதார்த்தம் மற்றைய தாவரங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும்.

## பரவல்

யாழ்ப்பாணத்தில் பாதீனியமானது இராச வீதியின் இருமருங்கிலும் செறிந்து காணப்படுகின்றது. இதன்பரம்பலானது, கோப்பாய், நீர்வேலி, சுன்னாகம், சந்தரோடை, மல்லாகம், அளவெட்டி, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், பிரானபற்று ஆகிய இடங்களில் செறிவாக உள்ளது. அத்துடன் இதன் பரம்பலானது தற்போது திருநெல்வேலியிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதன் ஆக்கிரமிப்பு யாழ்.நகரை நோக்கியதாக இருக்கிறது. எனவே நாம் பாதீனியத்தைக் கட்டுப்படுத்த அதிக கரிசனை காட்ட வேண்டும். இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதற்கான பிரதான காரணங்களாவன.

☼ பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள், பொதுமக்களின் குறைந்த பங்களிப்பு.

☼ பாதீனிய விதைகள் காற்றினாலும் நீரினாலும் மிக விரைவாக நீண்ட தூரத்திற்கு பரவக்கூடியன.

☼ வீரியமான முளைதகவினைக் கொண்டவை. அத்துடன் இதன் விதைகள் 7 வருடங்களுக்கு முளைதகவினைக் கொண்டவை. எனவே இதன் பரவல் உள்ள இடங்களில் 7 வருடங்களுக்கு களைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும்.



*பாதீனியமானது பின்வரும் முறைகளில் பரம்பலடைகின்றன.*

- பாதீனியத்தின் தாக்கமுள்ள இடங்களில் இருந்து உருவாக்கப்படும் விவசாய விதைகளின் மூலம்
- விவசாய உபகரணங்கள்
- கால் நடைகளுக்காக வெட்டப்படும் புற்களின் மூலம்
- கால் நடைகள்
- ஓடும் நீர்

### பாதீனியத்தால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்குகள்

விளை நிலங்களை ஆக்கிரமிப்பதனால் பயிர்களை விடக்கூடிய வளர்ச்சி வீதத்தினை கொண்டிருப்பதனாலும் பயிர்கள் விட கூடிய வளர்ச்சி வீதத்தினைக் கொண்டிருப்பதனால் பயிர்களுடன் சூரிய ஒளி, நீர் போசணை மற்றும் இடம் ஆகிய வற்றுக்கு போட்டியிட்டு பயிர்களின் வளர்ச்சியினைக் குறைக்கும். பாதீனியத்தின் வேர்த் தொகுதியினால் சுரக்கப்படும் நச்சுப் பதார்த்தங்கள் பயிர்களின் வளர்ச்சியைக் குறைக்கும்.

பீடைகளின் காவியாகத் தொழிற்படுகின்றது. பயிர்த்தாவரங்களின் மகரந்த சேர்க்கையினைக் குறைக்கும்.

### பாதீனியத்தால் மனிதனுக்கும், கால் நடைகளுக்கும் ஏற்படும் தீங்குகள்

மனிதன் இதனை உணவாக உட்கொள்ளாத போதிலும் இதன் மகரந்த மணிகள், தொடுகையினால் ஒவ்வாமை, ஆஸ்துமா, மஞ்சள் காய்ச்சல் மற்றும் தோல் அரிப்பு போன்ற உபாதைகள் ஏற்படுகின்றன.

கால்நடைகள் உணவாக உட்கொண்டால் வயிற்று உபாதைகளுக்கு உள்ளாகுவதுடன் இரை மீட்க அவதிப்படும்.

### கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

யாழ்ப்பாணத்தை நோக்கி இதன் பரம்பல் மிக வேகமாக உள்ளதினால் "வருமுன் காப்போம்" என்னும் தத்துவத்திற்கு இணங்க இதனைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

**இதனைப் பின்வரும் முறைகளில் கட்டுப்படுத்தலாம்**

- பாதீனியம் செடிகள் பூப்பதற்கு முன்னர் தகுந்த பாதுகாப்புடன் பிடுங்கி எரிக்கவேண்டும்.
- பயிர் நிலங்களை சணல் மற்றும் பச்சைப் பசளைகளினால் மூடிவிடுவதன் மூலம் முளைதிறனைக் குறைக்கமுடியும்.


பாதீனிய அழிப்பில் ஈடுபடும் பொதுமக்கள்

- சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை பாதீனியப் பரம்பலைக் குறைக்கக் கூடியது.
- பாதீனியத்தின் மூலம் சேதனப் பயிர்களை உருவாக்க முடியும். குழிமுறை சேதனப் பசளை ஊருவாக்கத்தின் மூலம் இதனை பயனுள்ள முறையில் பயன்படுத்தலாம். இவற்றில் காணப்படும் 'Parthenin' எனும் இரசாயனம் பயிர் வளர்ச்சியினைத் தூண்டுவதுடன் நெமற்றோட்டுக்களையும் (Nematodes) கட்டுப்படுத்தும் வல்லமையுடையது.

யோகநாதன் நிருஷாந்தன்
விவசாய உயிரியல் சிறப்பு மாணவன்
தகவல் தொடர்பு மையம்
விவசாயபீடம்.

இத் தாவரமானது பாதீனியத்திற்கு கிடைக்கும் நீர், வளி, போசணை ஆகியவற்றைக் குறைத்து பாதீனியத்தின் வளர்ச்சியையும் பூக்கும் ஆற்றலினையும் குறைக்கின்றது. இதனால் பாதீனியமானது (Marigold) செவ்வந்தி உடன் போட்டி போட முடியாமல் இறந்துபோகும்.

செவ்வந்தி (Marigold) தாவரத்தில் இருந்து பெறப்படும் சாற்றினை தெளிப்பதன் மூலம் பாதீனியம் விதையின் முளைதகவினையும் அதன் வீரியத்தையும் குறைக்க முடியும்.

Cassia tola என்னும் தாவரமும் பாதீனியத்தின் வளர்ச்சியையும், அதன் பரம்பலையும் கட்டுப்படுத்தும் இயூகலியரசு (Eucalyptus) மரத்திலிருந்து பெறப்படும் சாறுகளின் மூலமும் பாதீனியத்தைக் கட்டுப்படுத்தலாம்

5-10% செறிவினைக் கொண்ட Eucalyptus தாவரத்தின் எண்ணெய் (உயர் கொதிநிலையில் பிரித்தெடுக்கப்பட்டது) பாதீனியத்தின் மீது விசிறுவதனால் பாதீனியம் வாடி பின் கருகிவிடும்.

**இரசாயன முறை**

- 15%, 20% செறிவான உப்புக் கரைசலை விசிறுதல்.
- 2-4 D Esters விசிறுதல் (2-5 kg AI/ha)
- செறிவான Phosphate கரைசலை ஈரலிப்பான பாதீனியம் செடியின் மேல் விசிறுதல் இதுமற்ற பயிர்களையும் தாக்கும் என்பதால் பயிர்கள் அற்ற இடத்தில் மட்டுமே பொருத்தமானது.
- மெட்சல்பரோன் (Metsulfuron), (4.5g l/ha) கிளைபோசட் (Glyphosate) (1.5 kg/ha) ஆகிய களைநாசினிகள் விசிறி 15 நாட்களின் பின்னர் 90% -95% பாதீனியத்தை கட்டுப்படுத்தும்.
- பரகுவாட், 2-4D சோடியம் உப்பு ஆகியவற்றினை கலந்து விசிறுவதன் மூலம் 95% பாதீனியத்தைக் கட்டுப்படுத்தலாம்.

இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் பாதீனியத்தின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளதால் நாம் எல்லோரும் சிரத்தையுடன் ஒன்றாக செயற்பட்டு இயன்றளவில் அதன் பரம்பலைக் குறைக்கப் பாடுபடுவோம். இதன்மூலம் எமது சூழலினையும் வருங்கால சந்ததியினரையும் காக்கவேண்டியது எமது கடமையாகும்.

இதனை தனியே அதிகாரிகளினால் மட்டும் செய்துவிடமுடியாது. அதிகாரிகள், பொதுமக்கள், மாணவர்கள், விவசாயிகள் ஒன்றிணைந்த முயற்சியினால் மட்டும் வினைத்திறனாக பாதீனியத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

# லண்டனிலிருந்து அக்தர் வெளியேற்றம்



(லண்டன்)

உள்ளூர்ப் போட்டியில் பங்கேற்க லண்டன் சென்ற பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் சரியான விசா இல்லாத காரணத்தால் திருப்பி அனுப்பப்பட்டார்.

பாகிஸ்தான் வீரர் சொயிப் அக்தர் பல்வேறு சர்ச்சைகளில் சிக்க, தேசிய அணிக்கான ஒப்பந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டார்.

இதனால் கோபமடைந்த அக்தர் வெளிப்படையாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை (பி.சி.பி.) விமர்சித்தார். இது பி.சி.பி. விதிகளின்படி தவறு என்பதால் அவருக்கு ஐந்து ஆண்டுகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கத் தடை மற்றும் ரூபாய் 70 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து அக்தர் மேல் முறையீடு செய்ய, தடை 18 மாதங்களாகக் குறைக்கப்பட்டது. ஆனால் அபராதத் தொகையைக் கட்டாயம் செலுத்த வேண்டும் என பி.சி.பி. தெரிவித்தது.

இந் நிலையில் இங்கிலாந்தில் நடக்கும் உள்ளூர்ப் போட்டியில் சர்ரே அணி சார்பில் பங்கேற்க இவருக்குப் பி.சி.பி. அனுமதி வழங்கியது. இதையடுத்து அக்தர் நேற்று முன்தினம் லண்டன் சென்றார்.

ஆனால் ஹீத்ரோ விமான நிலைய அதிகாரிகளின் பரிசோதனையின்போது இவர் வைத்திருந்த விசா சட்டப்படி செல்லாது என்பது தெரியவந்தது. இது தவிர அவரிடம் தேவையான வேறு எந்த ஆவணமும் இல்லாததால் மீண்டும் பாகிஸ்தான் திருப்பி அனுப்பப்பட்டார்.

இதையடுத்து உள்ளூர்ப் போட்டியில் பங்கேற்கும் அவரது எண்ணம் நிறைவேறாமல் போனது. இது குறித்து சர்ரே அணியின் தலைமை நிர்வாகி கூறுகையில்,

அக்தர் போட்டிகளில் பங்கேற்கத் தேவையான முயற்சியை மேற்கொண்டோம். ஆனால் எதுவும் கை கொடுக்கவில்லை என்றார். (05)

# இந்தியக் கிரிக்கெட் சபை ஹரி கிறிஸ்டனுக்கு எச்சரிக்கை

இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் கிறிஸ்டன் தேவையில்லாமல் பேட்டி கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என இந்தியக் கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. சமீபத்தில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட கும்ளே தலைமையிலான இந்திய அணி டெஸ்ட் தொடரைப் பரிதாபமாக இழந்தது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தோனியின் இளம்படை ஒருநாள் தொடரை கைப்பற்றிச் சாதித்தது. இந் நிலையில் இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ஹரி கிறிஸ்டன் டெஸ்ட் போட்டிகளிலும் அணித் தலைவராகப் பணியாற்ற தோனி தயாராகி விட்டதாகவும் கும்ளே ஓய்வு பெறலாம் எனவும் சூசகமாகப் பேட்டியளித்தார்.

இதற்கு இந்தியக் கிரிக்கெட் சபையிடம் (பி.சி.சி.ஐ.) இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. தேவையற்ற பேட்டியளிப்பதை கிறிஸ்டன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றார் பி.சி.சி.ஐ. செயலர் நிரஞ்சன் ஷா.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், பி.சி.சி.ஐயின் விதி முறைப்படி பயிற்றுவிப்பாளர் இதுபோன்று பேட்டியளிப்பது தவறாகும். இது அவரது வேலையல்ல. அணித் தலைவர் யார் என்பதை முடிவு செய்யும் உரிமை தேர்வுக் குழுவினருக்குத்தான் இருக்கின்றது.




இந்திய வீரர்களுக்குப் பயிற்சியளிப்பது மட்டும் தான் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலை. அவர் அணியின் முக்கியமான நபர் என்பதால் எச்சரிக்கை மட்டும் அளித்துள்ளோம்.

கும்ளே தலைசிறந்த வீரர். எப்போது ஓய்வு பெற வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். நல்ல போர்மில் இருக்கும் வரை தேர்வுக் குழுவினரின் ஆதரவு அவருக்கு இருக்கும்.

அடுத்து வரும் டெஸ்ட் தொடருக்கும் அவர் தான் அணித் தலைவராக இருப்பார். அதில் எந்த மாற்றமும் இல்லை. தேர்வுக் குழுவினர் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்கள் இவ்வாறு நிரஞ்சன் ஷா தெரிவித்தார். (05)

# அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் பெடரர்



(நியூயோர்க்)

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் முன்னாள் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர், செர்பியாவின் நொவக் ட்ஜோவிக்குடன் மோதவுள்ளார்.

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்களுக்கான காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இதில் இரண்டாம் நிலை வீரர் ரோஜர் பெடரர் 130 ஆவது இடத்தில் உள்ள லக்சம் பேர்க்கின் கில்லி முல்லரைச் சந்தித்தார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் பெடரர் 7:6, 6:4, 7:6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இதன் மூலம் பெடரர் கிராண்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் தொடர்ச்சியாக 18-வது முறை அரையிறுதியில் விளையாடத் தகுதி பெற்றார். பெடரர் அமெரிக்க ஓபனைத் தொடர்ந்து 4-வது தடவையாகவும் கைப்பற்றும் எதிர்பார்ப்புடன் இம்முறை களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர நேற்று முன்தினம் நடந்த மற்றைய காலிறுதிப் போட்டியில் 3 ஆம் நிலை வீரர் நொவக் அமெரிக்காவின் அன்டி றொடிக்கை 6:2, 6:3, 3:6, 7:6 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

இதன்படி இன்று நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் நொவக், பெரடரைச் சந்திக்கவுள்ளார். அடுத்த அரையிறுதி ஆட்டத்தில் முதல்நிலை வீரர் ரபெல் நடால் பிரித்தானியாவின் அன்டி முரேவுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளார். (05)

## டெமன்டிவா-ஜோன் கோவிக் அரையிறுதியில் இன்று மோதல்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் இன்று நடைபெறும் பெண்கள் அரையிறுதிப் போட்டியில் எலீனா டெமன்டிவா (ரஷ்யா)-ஜெலீனா ஜோன் கோவிக் (செர்பியா), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா)- சபீனா (ரஷ்யா) மோதுகிறார்கள்.

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பெயஸ்-காரா பிளாக் (சிம்பாவே) ஜோடி சம்பியன் பட்டம் பெற்றது. இறுதிப் போட்டியில் பெய்ஸ்-காரா ஜோடி 7:6 (8:6), 6:4 என்ற செட் கணக்கில் மூர்ரே (இங்கிலாந்து)-கியூபா (அமெரிக்கா) ஜோடியை வென்றது. இந்த ஆட்டம் 97 நிமிட நேரம் நடந்தது. (05)

# சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதை பந்தாட்டத்தின் இறுதிப் போட்டி நாளை

## பல்கலைக்கழகத்துடன் சென்.அன்ரனிஸ் மோதுகின்றது

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட நொக்கவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதுகின்றது. இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மாவட்ட விளையாட்டு அலுவலர் எ.எவ்.ஜே.ரூபசிங்கம் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அந்தோனிப்பிள்ளை சென்.மேரிஸ் தேவாலய உதவிப் பங்குத் தந்தை வண.பிதா ஜி.எவ். கனிசியுஸ் ராஜ், வேல்ட் விசனின் மாவட்ட இணைப்பாளர் ரி.எம்.வசந்தநாயகம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, சென்.நீக்கிலஸ் அணி, றோயல், பாடுமீன், சென்.மேரிஸ், ஞானமுருகன் ஆகிய அணிகளுடன் மோதியது. இதில் சென்.நீக்கிலஸ் மற்றும் பாடுமீன் அணிகளுடன் மோதி தோல்வியடைந்திருந்தது.

சென்.அன்ரனிஸ் அணி; ஆனைக் கோட்டை யூனியன், ஜங்கென்றிஸ், ஞானமுருகன் ஆகிய அணிகளுடன் மோதி சகல போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் 25 அணிகள் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி



இருப்பவர்கள்:- (இ-வ) சீ.டி.மதியழகன் (முகாமையாளர்), பி.கிஷோக்குமார், சி.நிரோஷன், அ.யூட் பிரசாந்தன், எஸ்.சபானந், எஸ்.ரஞ்சித்குமார், பி.தினேஷ்குமார், கே.கணேஷநாதன் (பதில் பணிப்பாளர்),
நிற்பவர்கள்:- இ.பாலு, கி.சுதாகரன், ரெ.அன்ரன் பெஸ்ரியன் பீரிஸ், யா.பிரகாஷ், என்.குகனேஸ்வரன், க.சதீஸ்வரன், சு.நிருத்திகன், ஓ.பிரபாகரன்.

### சென்.அன்ரனிஸ் அணி



இருப்பவர்கள்:- (இ-வ) ய.யதீபன், எ.எல்டன், தி.அஜந்தன் (அணித் தலைவர்), எஸ்.நிலான்டோ , ப.கஜானந்தன்,
நிற்பவர்கள்:-எல்.சோபட், ப.மதன் (உதவிப் பயிற்றுநர்), அ.கெபின் (பயிற்றுநர்), பீ.விஜித், ம.உதயதாஸ், ம.அனிஸ்ரன்.

யாழ்ப்பாணம்.



## வலி.வடக்கு உயர் பாதுகாப்பு...

பாதுகாப்பு வலயத்தில் மக்களை கட்டம் கட்டமாக மீள் குடியேற்றுவதற்கான யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையிலான விசேட குழு நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

இக் கூட்டத்தில் குழுவில் அங்கம் வகிக்கும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.இராணுவ. கட்டளைத் தளபதி ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிராங்லின் பெர்னாண்டோ, வடபிராந்திய கடற்படை கட்டளையிடும் அதிகாரி ரியர் அட்மிரல் ரி.எஸ்.வி.சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் ஆராயப்பட்டவையாக,

✹ உடனடியாக 24 குடும்பங்கள குடியமர்த்தப்படுவார்கள். அவர்களுக்கான நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் அவர்களின் மீள் குடியேற்றம் பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்படும்.

✹ மேலும் 233 குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களின் இடங்களும் அடையாளம் காணப்பட்ட நிலையில் அக்குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்காக அவ்விடங்களிலுள்ள மிதிவெடிகளை விரைவாக இராணுவத்தினரால் அகற்றப்படல் வேண்டும். அத்துடன் குறித்த 233 குடும்பங்களும் மீள் குடியேறுவதற்கு தற்காலிகமான தங்குமிட வசதிகளை யாழ்.அரச அதிபர் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவர்களுக்கான நிவாரணங்களையும் ஒழுங்கமைத்துக் கொடுக்க வேண்டும்.

✹ மேலும் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ளதாக பதிவு செய்த 3 ஆயிரத்து 419 குடும்பங்களில் 857 குடும்பங்கள் இனம் காணப்பட்டு அவர்களின் இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்களில் ஏற்கனவே 600 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலாக இனங்காணப்பட்ட மேலும் 696 குடும்பங்கள் விரைவில் அவர்களின் இடங்கள் அடையாளம் காணப்படுவதுடன் அடுத்த கட்டமாக மீள் குடியேற்றப்படுவார்கள் என தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இதுவரை எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் பிரகாரம் அறிக்கை தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்படும் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் மக்களை மீள் குடியேற்றுவதற்கான வழக்கு விசாரணையின்போது சமர்ப்பிக்கப்படுமெனவும் முடிவு செய்யப்பட்டது. (ச-5)

## தமிழக...

கடந்த 3 ஆம் திகதி கடலில் மீன் பிடிக்கச் சென்றனர். நேற்று முன்தினம். அவர்கள் கரை திரும்ப வேண்டும் ஆனால் நேற்று அதிகாலையே 6 மீனவர்களும் கரை திரும்பினார்கள். இது பற்றி அவர்கள் கூறியதாவது,நாங்கள் கடலில் மீன் பிடித்துவிட்டு கரை திரும்பிக் கொண்டிருந்தோம் கோடியைக் கரை அருகே வந்தபோத எங்களை வழி மறித்த இலங்கை கடற்படையினர் திடீரென்னு துப்பாக்கியால் சுட்டனர். படகிற்குள் குனிந்து உயிர் தப்பினோம் ஆனால் ஒரு மீனவர் காலில் காயமடைந்தார் எனத் தெரிவித்தனர். (ச-5)

## மட்டக்கள...

அதிகாரி எஸ்.டி.விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை மீட்கப்பட்டுள்ள 35 அங்குல நீளமுள்ள ஆர் பீ ஜீ ஆயுதம் மூலம் பல மாடிகட்டடங்களை ஒரே நேரத்தில் தகர்க்கக் கூடிய வல்லமையைக் கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## 2009ஆம்...

குடாநாட்டிற்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கும் வைபவம் நேற்று நண்பகல் கொழும்பு துறைமுக பண்டார நாயக்க இறங்கு துறையில் இடம் பெற்றபோது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்,அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா, கல்விச் சேவைகள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல, பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சி தானந்தன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திவாரட்ண, கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் பின்பூ.எம்.என். புஷ்பகுமார மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகள், துறைமுக அதிகார சபை அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-5)

## வவுனியா...

மணியளவில் உழவூர்தியில் சென்று கொண்டிருந்தவர்களை இலக்கு வைத்து படையினரின் ஆழ ஊடுருவம் அணியினர் கிளைமோர் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் உழவூர்தி சேதமடைந் துள்ளதுடன் அதில் சென்ற சிறிநிவாசன் (வயது 48) என்பவர் படுகாயமடைந்துள்ளார் என கிளிநொச்சிச் செய்திகள்தெரிவித்தன. (ச-5)

## வெள்ளவத்...

இதன்போது சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி அமரசேகர தெரிவித்தார்.

குறித்த ஒரு தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடும் பொருட்டு வடக்கிலிருந்து வந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் தங்கியிருப்பதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்தே இத் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (ச-5)

## நவநீதம்...

தோருக்கான மனிதாபிமான உதவிகள் மற்றும் உத்தேச மனித உரிமைகள் தொடர்பான தேசிய செயல் திட்டம் என்பன குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 9-வது கூட்ட அமர்வை முன்னிட்டு அமைச்சர் மகிந்த சமரசிங்க ஜெனீவா சென்றுள்ள நிலையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மனித உரிமைகள்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் தலைமையிலான இக்குழுவில் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் பி.எம்.மொகான் கேதீஸ் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். (ச-5)

## வன்னி நிலம் இராணுவத்...

காண்பதும் பொய்,காதால் கேட்பதும் பொய்,தீர விசாரித்தறிவதே மெய் என்கிற அனுபவ வாக்கியம் போர் நடைமுறைக்கும் பொருந்தும். போரில் பல்வேறு விதமான போக்குகள் காட்டி எதிரியை ஆழ உள்ளிழுத்து அழிக்கும் வல்லமையுடனேயே விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளது.

வன்னி நில அமைப்பும், புலிகளின் படை வலுவும் இணைந்து இந்தப் போர்க்களம் புரட்சியை ஏற்படுத்தும் என்பது திண்ணம். அப்போது வன்னி நிலம் படைக்கு ஒரு வரலாற்றுத் தோல்வியை வழங்கும்.

வன்னிப் போரரங்கில் படைகள் சந்திக்கப்போகும் படுதோல்வியானது, அதன் ஆக்கிரமிப்பு எண்ணத்திற்கு நிரந்தரச் சாட்டையடியாகவே விழப் போகின்றது.

இதன் மூலம் புலிகள் இயக்கம் அசைக்க முடியாத தனது இராணுவப் பலத்தை நிரூபித்து விடுதலைப் போராட்டத்தின் உயர் பரிமாணத்தை வெளிப்படுத்தும்.

எனவே எதிர்வரும் நாட்களில் வன்னிப் போர்க்களத்தில் சிங்களப் படைகளுக்குப் பேரழிவு காத்திருக்கின்றது எனவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-5)

## காணாமல் போயிருந்த...

வன்னி மற்றும் யாழ்ப்பாணக் களமுனைகளில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதல்களில் 36 விடுதலைப் புலிகளும் 5 இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் 8 சடலங்கள் படையினரால் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் இராணுவ தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

வன்னிக் களமுனைகளில் கடும் சண்டைகள் இடம்பெற்றதாகவும், இதில் மேலும் 16 படையினர் காயமடைந்திருப்பதாகவும் இராணுவ தலைமையகம் தனது இணையத்தள அறிக்கை ஒன்றில் கூறியிருக்கின்றது.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் சடலங்களில் நான்கு சடலங்கள் நேற்று முன்தினம் மாலை வவுனியா வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வியாழக்கிழமை நள்ளிரவுடன் முடிபடைந்த 48 மணிநேர காலப்பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவி[illegible] இராணுவத்தினரின் 30 சடலங்களை ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் உள்ள படை அதிகாரிகளிடம் கையளித்திருப்பதாக தெரிவித்துள்ள இராணுவத் தலைமையகம் கடந்த 4 தினங்களாக கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன்குளம் பிரதேச கள முனைகளில் விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்ற உக்கிர சண்டைகளில் காணாமல் போயிருந்த படையினர் சிலரது சடலங்களும் இவற்றிலிருந்து அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றது.

இரண்டாவது தொகுதியாக நேற்று முன்தினம் மாலை ஓமந்தை படை அதிகாரிகளிடம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரால் கையளிக்கப்பட்டிருந்த 11 சடலங்களும் அடையாளம் காண்பதற்காக அநுராதபுரம் மாவட்டம் பதவியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த சடலங்களில் பல உருக்குலைந்தும் சிதைந்தும் இருப்பதனால் உரிய இராணுவத்தினரை அடையாளம் காண்பதில் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் இராணுவம் தனது இணையத்தள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றது. (ச-5)




துயர் பகிர்கின்றோம்

எமது கிளிநொச்சி கரித்தாஸ்- கியூடெக் நிறுவன வாகன உதவி முகாமையாளர்

திரு.இராஜதுரை வோல்டர் பாலகிருஸ்ணன்

அவர்கள் 04.09.2008 அன்று காலமானார்.

அன்னாரின் ஆத்மா இறைவனின் திருவடிகளில் ஆறுதல் அடைந்து நித்திய வாழ்வு கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம். இவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் இவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆறுதல் அடைய வேண்டி நிற்கின்றோம்.

இயக்குனரும், பணியாளர்களும்,
கரித்தாஸ் - கியூடெக்,
யாழ்ப்பாணம்.

(C-1502)

மரண அறிவித்தல்

திரு.வோல்டர் பாலகிருஸ்ணன் இராஜதுரை



(CARITAS - HUDEC)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வோல்டர் பாலகிருஸ்ணன் இராஜதுரை 04.09.2008 வியாழக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் கிறிஸ்ரபெல் தேவஞானம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராஜதுரை (வட்டுக்கோட்டை) அவர்களின் அருமை மகனும், வேலாயுதபிள்ளை காலஞ்சென்ற திருமதி தேவபுஷ்பம் ஆகியோரின் மருமகனும், தாமரைகுமாரி (England), அரசகுமாரி (Denmark), சாந்தகுமாரி (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), ஆகியோரின் அருமைச் சகோதரனும், சுரேஸ் (CARITAS-HUDEC) இன் அன்பு பெரியப்பாவும் நவரட்ணராஜா, இராசையா, விக்னராஜா (உயர் நீதிமன்ற நீதிபதி -யாழ்ப்பாணம்), ஸ்ரெலா சந்திரன், மேரி கிறிஸ்ரீனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அரசடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்
இ.த.விக்னராஜா
(மைத்துனர்)

(C-1500)

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்
வட்டுக்கோட்டை

பின்வரும் பாடநெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.

அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. குளிர்சாதனப்பெட்டி (Fridge),வளி சீராக்கி (Air-conditioner) திருத்துதலும் பொருத்துதலும், *(1 வருடம்)*
2. மின் இணைப்பு அமைத்தல். (Electrical Wiring) *(1 வருடம்)*
3. அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும். *(6 மாதங்கள்)*
4. ரேடியோ, T.V. பழுதுபார்த்தல். *(6 மாதங்கள்)*
5. மின்னியலும் இலத்திரனியலும். (Electrical &Electronic) *(6 மாதங்கள்)*
6. Civil Draughtmanship. *(1 வருட டிப்ளோமா கற்கைநெறி)*
7. Computer Programming and Data Processing. *(1 வருட டிப்ளோமா கற்கைநெறி)*
8. MS Office. *(3 மாதம் பகுதி நேரம்)*
9. Printing Technology. *(3 மாதம் பகுதி நேரம்)*
10. Computer Hardware. *(3 மாதம் பகுதி நேரம்)*
11. Micro Media Flash. *(3 மாதம் பகுதி நேரம்)*
12. Visual Basic. *(3 மாதம் பகுதி நேரம்)*

➢ குறுகியகால பயிற்சி நெறிகள்.
➢ குறைந்த கட்டணம்! அதுவும் தவணை முறையில் செலுத்தும் வசதி!!
➢ நிறைவான செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய நன்கு வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகள்.
➢ மேலதிகமாகக் கணினி, ஆங்கிலம் ஆகிய துறைகளில் அனைவருக்கும் பயிற்சி.
➢ சிறந்த நூலகம், விளையாட்டுத்துறை போன்ற மேலதிக வசதிகள்.
➢ 784,785,789 இலக்க பேருந்து,சிற்றூர்தி மார்க்கங்களில் வந்து செல்லக் கூடிய அமைவு.

*சுயதொழில் ஆரம்பிக்க ஆர்வமுள்ளோருக்கும், மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் பெறச் செல்ல எண்ணியுள்ளோருக்கும் மேற்படிப்பை தொடர முடியாமற் போனோருக்கும் இது அரிய சந்தர்ப்பம்!*

இப் பாடநெறிகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் 10.09.2008, 10.00 மு.ப எமது நிறுவனத்தில் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில், நேரடியாகவோ தபால் மூலமாகவோ பெற்று, விண்ணப்பிக்கலாம்.

இயக்குனர்,
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை.
T.P:- 021 222 8275, 060-2213139

(C-1498)

முதலீடு இல்லாத முயற்சியுடைய அனைவரிற்கும் அரியதோர் வாய்ப்பு

விபரம் நாளைய "வலம்புரியில்"

(1655)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.